விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | மாசி 01 | ஞாயிற்றுக்கிழமை (13.02.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 56

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION

பணப் பரிமாற்றம்

* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦ வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦ 365 நாள் சேவை
♦ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN
COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com


46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

## நேருவுக்கு "மாமனிதர்" பட்டம் தலைவர் பிரபா கௌரவம்



பகைவனின் தாக்குதலுக்கு பலியான அரியநாயகம் சந்திரநேரு அவர்களின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக "மாமனிதர்" என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

தலைவர் பிரபாவின் கையொப்பத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் 09.02.2005 திகதியிட்டு வெளியிட்டுள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



தமிழ் மக்களின் விடிவையும் தமிழீழ மண்ணின் விடுதலையையும் தனது வாழ்வின் அதியுன்னத இலட்சியமாக வரித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காக அயராது உழைத்த உன்னத மனிதரை தமிழர் தேசம இன்று இழந்துவிட்டது. தமிழ் மக்களது உரிமைக்காகவும், நீதிக்காகவும் ஓயாது ஒலித்த ஒருபெரும் குரல் இன்று அடங்கிவிட்டது. பகைவனின் மிருகத்தனமான தாக்குதலுக்கு ஒரு தமிழினப் பற்றாளர் பலியாகிவிட்டார். அரியநாயகம் சந்திரநேரு அவர்கள் தன்னலம் அகன்ற மனிதநேயம்மிக்க ஒரு பொதுநலவாதி. தமிழீழ மண் தந்ததலைசிறந்த ஒரு மனிதஉரிமை ஆர்வலர். புரட்சிகரமான ஒரு அரசியல்வாதி. அனைவரது உள்ளங்களையும் கவர்ந்துகொண்ட ஒரு உயரிய பண்பாளர். இவரது சாவு தமிழர் தேசத்திற்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பு.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 2 பெண்களின் சடலம் கரையொதுங்கியது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வன்னாரிபுரம் கடல்பகுதியில் பெண்கள் இருவரின் சடலங்கள் நேற்றுக் கரையொதுங்கியதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கிய இளைஞன்

(சாவகச்சேரி)

மரம் வெட்டுவதற்காக சென்ற இளைஞன் ஒருவர் மிதிவெடியில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தாலினால் இயல்பு வாழ்வு நேற்று முடக்கம்

# குடாநாட்டில் பரவலாக கலவரம்

# இராணுவக் காவலரண்கள் எரிப்பு



### பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு பொதுமக்கள் - இராணுவம் பரஸ்பரம் கல்வீச்சு

(பிரதேச செய்தியாளர்கள்)

கிழக்கில் இடம்பெற்ற படுகொலையைக் கண்டித்து நேற்று குடாநாட்டில் இடம்பெற்ற ஹர்த்தாலினால் இயல்பு வாழ்க்கை முற்றாக முடங்கியதுடன் வீதித்தடைகளில் பொதுமக்களிற்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கலவரம் வெடித்து இராணுவக் காவலரண்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. (௨ ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் அரசியல் பணிமனை மீது



தினருக்கும் இடையில் களேபரம் வெடித்து இராணுவக் காவலரண்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. (௧௨ ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் அரசியல் பணிமனை மீது கைக்குண்டு வீச்சு; இளைஞன் பலி

(மன்னார்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறை அலுவலகமும் சமாதானச் செயலகப் பணிமனையும் சேர்ந்து இயங்கும் கட்டடம் மீதுஆட்டோவில் வந்த இனந்தெரியாத குழுவினரால் நேற்றிரவு 7.50 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந் ததுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் பள்ளிமுனையைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு உற்சாகமளிக்கும் ஐ.நா. செயலரின் கண்டனம்

## இது பற்றி ஐ.நாவின் பதில் என்ன என்கிறது ஜே.வி.பி.


ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச்செயலாளர் ஒருவர் அமைப்பு ஒன்றின் உறுப்பினர் உயிரிழந்தமையை கண்டித்து ஒரு போதும் அனுதாபச் செய்தியை வெளியிட்டிருக்கவில்லை யென்று ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொபிஅனானின் செயல் புலிகளின் அமைப்பை உற்சாகப்படுத்தும் நடவடிக்கையாகும் இவ்வாறான செய்தி நாட்டின் இறைமைக்கு பாதகமானது. ஆகவே இலங்கை அரசாங்கம் என்ற வகையில் ஐ.நா.சபையின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துமாறு தாம் கோரிக்கை விடுவதாகவும் வீரவன்ச தெரி வித்துள்ளார். தேசப்பற்றுள்ள இயக்கத்துடன் நேற்று நடைபெற்ற சந்திப்பில் வீரவன்ச இவ்வாறு கூறினார். லக்ஷ்மன் கதிர்காமரும் இதில் கலந்துகொண்டார்.(08)

# கிழக்கு கொலை சமாதான முயற்சியில் நஞ்சு கலந்ததற்கு ஒப்பானது: அகாசி

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டமை சகலருக்கும் அதிர்ச்சி தரக்கூடியது அத்துடன் இச் சம்பவம் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான நடவடிக்கையில் நஞ்சு கலந்ததிற்கு சமமானதாகும் என ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாசி தெரிவித்துள்ளார்.

யசூசி அகாசிக்கும் விடுதலைப் புலிகளின் (12 ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாட்டை மீளக் கட்டியெழுப்ப

# 30 கோடி டொலர் செலவிலான 3 வருட கால திட்டம் தயாரிப்பு

(கொழும்பு)

சுனாமியால் அழிவடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு 30 கோடி டொலர் செலவிலான மூன்று வருடகால புனர்நிர்மாண நகல் திட்டமொன்று அடுத்த வாரம் வெளியிடப்பட விருக்கிறது.

அடுத்த மாத இறுதியில் இந்தத் திட்டம ஒரு இறுதி ஆவணமாகப் பூர்த்தி செய்யப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

நன்கொடை நாடுகளின் பூர்வாங்க மதிப்பீடுகளுக்கு ஏற்ப இந்தத் திட்டம் தயாரிககப்படுவதாக ஜனாதிபதியின் ஆலோசகர் மனோதித்தவெல தெரிவித்தார்.

சிவில் சமூகத்தினருடனும், நன்கொடை நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னா அனைவரினது எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றும் வகையில் இவ் இறுதி ஆவணம் தயார் செய்யப்படவுள்ளது.

இந்த நடுத்தரக் காலத்திட்டத்தில் நாடெங்கிலும் புனர்நிர்மாணத்திட்டங்களை ஆரம்பிப்பது பற்றி விரிவாக விளக்கமளிககப்படும். எவ்வாறாயினும், சுமார் 60 சதவீதமான புனர் நிர்மாணப்பணிகள் வடக்கு- கிழக்கில் கூடுதலாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலேயே மேற்கொள்ளப்படும்.

சுனாமி கடல் அனர்த்தத்தில் இருந்து உயிர்தப்பியவர்கள் மீண்டும் இயல்பு வாழ்க்கையினை ஆரம்பிப்பதற்கு உதவும் வகையில் மீன்பிடி, சிறியதொழில் முயற்சிகள் மற்றும் சில அடிப்படைக்கட்டமைப்புக்கள் ஆகியவற்றை மீள அபிவிருத்தி செய்வது குறித்து இத்திட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்படும்.

அடுத்த தசாப்தத்தில் அடிப்படைக் கட்டமைப்புத் தேவைகள் குறித்து கவனம் செலுத்தப்படவிருக்கும் 140 டொலர் செலவிலான உதவித்திட்டத்திற்குப் புறம்பாகவே இந்தப் புனர்நிர்மாணத் திட்டம் செயற்படுத்தப்படும். ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஏற்பட்ட அனர்த்த மதிப்பீடுகளின் அடிப்படையில், உத்தேசத் திட்டம் அமுல் செய்யப்படும் எனவும் மனோதித்தவெல மேலும் தெரிவித்தார். (ற-4)

**மக்களின் குற்றச்சாட்டால்**

## கிராம உத்தியோகத்தர் சுருக்கிட்டு தற்கொலை!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்துக்குள்ளாகிய மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கியதில் பாரபட்சம் காட்டிய குற்றச்சாட்டைத் தாங்கமுடியாத கிராம உத்தியோகத்தர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம் மீட்டியாகொடைப் பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது. இலக்கம் 68 பீ வலக்கட மற்றும் இலக்கம் 68 மெட்டிவல பிரிவுகளில் கடமையாற்றிய அருமாஹந்தி ஸிரில் ரூபசிங்க தசில்வா (வயது-55) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டவராவார்.

இது பற்றி அவரது மனைவி அருமாதுரதனவதி (ஆசிரியை) தெரிவிக்கையில், நிவாரணப் பொருட்கள் வழங்குவதில் பிரதேச மக்கள் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களைசசுமத்தியதாகவும் இதனால் மனமுடைந்தே தன் கணவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரிவித்தார். (க-9)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி மண்டைதீவு மகாவித்தியாலய மைதானத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு மேற்படி பாடசாலை அதிபர் சுப்பிரமணியம் கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவகக கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வசந்தகுலசிங்கம் இராதாகிருஷ்ணனும், சிறப்பு விருந்தினர்களாக வேலணைக் கல்விக் கோட்ட அலுவ்லர் சோமசுந்தரம் தில்லைநாதன், தீவகக் கல்வி வலய முகாமையாளர் வேல்நாயகம் திருச்சபேசன், தீவகக் கல்விவலய உடற் கல்வி ஆசிரிய ஆலோசகர் நா.லோகநாதன், மண்டைதீவு மகாவித்தியாலய முன்னாள் அதிபர் கைலாசபிள்ளை பேரின்பநாயகம் மற்றும் சமாதான நீதவான் த.சிவபரம்சோதி வட இலங்கை இந்துமாமன்ற அமைப்பாளர் சு.குணராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.(க-9)





தென்னிலங்கையில் இருந்து வருகைதந்த சர்வ மதக் குழுவனர் நேற்றுக்காலை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் பிரதி இணைப் பாளர் குகனைச் சந்தித்துக் கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:ஞா. ஜங்கரன்)

## கௌசல்யன் உட்பட 4 போராளிகளுக்கும் கிளிநொச்சியில் வீர வணக்க நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்ரினன கேணல் கௌசல்யன் உட்பட 4 போராளிகளினதும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பின ரும் நாட்டுப்பற்றாளருமான அரிய நாயகம் சந்திர நேரு ஆகியோரது வீரவணக்க நிகழ்வும் கண்டனப்பேரணியும் நேற்று முன்தினம இடம்பெற்றன.

நேற்று முன்தினம் காலை9.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாடடு மைதானதில் இருந்து லெப் கேணல் கௌசல்யன் உட்பட 4 மாவர்ாகளினதும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் நாட்டுப்பற்றாளருமான அரியநாயகம் சந் திர நேருவினதும் உருவப்படங்கள் பாணட் வாத்திய இசையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வீர வணக்க நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூவிளி தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை மூன்று மாவீரர்களின் தயாரான திருமதி பொன் தியாகம் ஏற்றி வைத்தார்.

லெப் கேணல் கௌசல்யன் நாட்டுப் பற்றாளர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு ஈகைச் சுடரினை தமிழழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து ஏனைய மாவீரர்களது உருவப்படங்களுக்கு சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டது நினைவுரைகளினை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பசுபதிப்பிள்ளை தனுஷியா மகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து சிறப்புரைகளை தமிழீழ மகளீர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தமிழ் விழி தூயவன் அரசறிவியல் கல்லூரியைச் சேர்ந்த அர சண்ணா ஆகியோா நிகழ்த் தினர்

இந்நிக்ழ்வில் அரச அரச சார்பற்ற திணைக்களப் பிரதிநிதிகள் பொது மக்கள் மற்றும் மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ற-4)

## போராளிகள் கிழக்கிற்கு!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் போராளிகள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம் ஆகியோரது படுகொலையையடுத்து புலிகளின் தலைமைப் பீடம் முக்கிய முடிவுகள் சிலவற்றை எடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இதன் பிரகாரம் வடபுலத்தில் அரசியல் பணிகளில் ஈடுபடடிருந்த விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் போராளிகள் பலரும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுவதற்காக அனுப்பப்பட்டு வருகின்றனர்.

விடுதலைப்புலிகளால் கருணா வெளியேற்றப்பட்ட பிரச்சினையால் எழுந்திருந்த சிறிய அளவிலான கலகலப்பினை அடுத்து, வடக்கு-கிழக்கு என்னும் பிரதேசப் பாகுபாட்டினை ஏற்படுத்த அரசும், அதனுடன் இணைந்த ஒரு சில அரசியல் கட்சிகளும், சிங்கள இனவாதிகளும் முழுவீச்சில் செயற்பட்டிருந்தனர்.

எனினும், கால ஓட்டத்தில் கிழக்கு மககளிடையே இந்த விஷமப் பிரசாரங்கள் எடுபடாத நிலையில் அந்த முயற்சிகளும தோல்வியடைந்திருந்தன. இந்த நிலையில் கருணா எனும் நபரைக் காரணம் காட்டி மீண்டும் கிழக்கில் அரச படைகள் கொலைகளில் ஈடுபட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் தரப்பில் குற்றச் சாட்டுக்கள் எழப்பட்டுவரும் நிலையிலேயே, கிழக்கில் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அந்தப் பகுதியில் போராளிகளுககுத் துணையாக வடபுலங்களில் இருந்து அரசியல் துறைப் போராளிகள் அனுப்பப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

ஏற்கனவே துணை அரசியல் துறைப் பொறுப்பாளராகக் கடமையாற்றி வந்த செம்மணன் தற்போது கிழக்கு மாகாணத்தில அரசியல் பணிகளுக்காக மாற்றப்பட்டுள்ளதுடன், அவர் அங்கு தனது பணிகளைப் பொறுப்பேற்று செயல்ப்பட்டு வருகின்றமை குறிப்பிடததக்கது.(ற-4)


**சிறுவிளம்பரம்**

**2005 -பலாபலன்கள்**

சோதிடர் V.A. சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். மற்றும் ஆங்கிலத்தில் 50 கட்டுரைகள், அழகியல் (தரம் 1-5) எண் சாத்திரம், ஜாதகம் எழுத, திருமணப் பொருத்தம் பார்க்க, மணமக்களைத் தேடித்தர, உங்கள் எதிர் காலம பற்றி சிந்திக்கும் வேளையில் சந்தித்துப் பாருங்கள். இல01, பழம் றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

(9352)


## இராசிபலன்

13.02.2005

(மாசி 01 ஞாயிற்றுக்கிழமை)

ரேவதி முன்னிரவு 7.52 மணிவரை

இராகுகாலம் 05.03 - 06:33 மணிவரை

சுபநேரம் 09.33 -11.03 மணிவரை

பஞ்சமி முன்னிரவு 09.54 மணிவரை

அமிர்த சித்தம்

| | |
|---|---|
| மேடம் | சுபசெலவு, உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம், உணர்ச்சி வசப்படுதல். |
| இடபம் | தனவரவு, கீர்த்தி, குடும்பநன்மை, தொழில் முன்னேற்றம். |
| மிதுனம் | அதிகபிரயாசை, சுபநிகழ்வு, முயற்சி கைகூடும், பிறர்உதவி. |
| கடகம் | காரிய தாமதம், அமைதிக் குறைவு, புதிய திட்டமிடல், பிரயாசை. |
| சிங்கம் | தொழில் கஷ்டம், வீண்பிரச்சினை, காரிய தாமதம், தெய்வசிந்தை. |
| கன்னி | பிரயாண நன்மை, நணபர்கள் சந்திப்பு, முயற்சி பலிதம், தனலாபம். |
| துலாம் | பகைவர் நேசம், காரிய சித்தி, நல்ல வரவேற்பு, தொழில் சிந்தை. |
| விருச்சிகம் | முயற்சி தாமதம், சொத்துப் பிணக்கு, தெய்வ சிந்தை, மனச்சஞ்சலம். |
| தனுசு | உஷ்ண வியாதி, தாய்வழி உறவு, புதிய விடயம், காரியதாமதம். |
| மகரம் | தெய்வ தரிசனம், தொழில் சிறப்பு, நல்ல முயற்சி, போசன சுகம். |
| கும்பம் | காரிய அலைச்சல், அதிகவார்த்தை, தெய்வசிந்தை, தனவிரயம். |
| மீனம் | ஜனவசியம், தனவரவு, நல்ல முயற்சி, பிரயாணம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

– வளவன்


**31 ஆம் நாள் நினைவுதின அழைப்பு**

**14-02-2005 திங்கள்**

பூலோகத்தில் 20 03 1932



சிவலோகத்தில் 15 01 2005

**அந்தோனியாப்பிள்ளை- யாக்கோப்பு**

கருவாகச் சுமந்த எமக்காய்
தம்மை மெழுகாக ஈந்த எம் அன்னை
இம்மண்ணை விட்டேகி விட்ட இம்
முப்பத்தியோராம் நாளிலே
விண்ணக வீட்டிலே அவர் உறைந்து மகிழ
எம் தந்தையாம் இறைவனின் ஆசி வேண்டி
எம் இல்லத்திலே அளிக்கும் உபசரிப்பிலே
கலநது கொள்ள உறவினர் அன்பர்கள்அனைவரையும் அன்பு கொண்டு அழைக்கின்றோம்.

**திருப்பலி வழிபாடு**

**காலை 7.00 மணி பங்கு ஆலயம்**

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

பிள்ளைகள், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

(C/1080)

## இன்று ஒரு தகவல்

# நீச்சல்

"உங்களுக்குக் குழந்தை பிறந்து ஆறுமாதம் ஆகிவிட்ட தாமே! அதுதான் கேள்விப்பட்டு பார்த்து விட்டுப் போகலாம் எனறு வந்தேன்! குழந்தை எங்கே? தொட்டிலில் தூங்குகிறதா?" எனறு கேட்டார் ஒருவர் ."இல்லை! அது நீச்சல் பயிற்சிக்குப் போய்விட்டது'' என்றார் இன்னொருவர்.

இதைக் கேட்டவுடன் நீங்கள் ஆச்சரியப்படலாம். இது சாத்தியமா என்று நினைக்கலாம்! ஆறுமாதக் குழந்தைக்கு நீச்சல் பயிற்சியா? ஆமாம்! சோவியத்ரஷ்யாவில் அப்படித் தான் நடக்கிறது. அவர்கள் சிறுவயதில் பெரிய நீச்சல் வீரர்க ளாகிவிடுகிறார்களாம். ஒலிம்பிக்கிலும் நீச்சல் ஒரு முக்கிய மான போட்டி. 1896ஆம் ஆண்டிலிருந்து தான் நீச்சல் விளை யாட்டையும் ஒலிம்பிக்கில் சேர்த்திருக்கிறார்கள். நம்மிலும் நீச்சல் தெரியாதவர்கள் அதைக் கற்பது நல்லது. ஒலிம் பிக்கில் கலந்துகொள்வதற்காக சொல்லவில்லை. தப்பித் தவறி எங்காவது தண்ணீரில் விழுந்து விட்டால் தப்பித்து கரைக்குவர உபயோகமாக இருக்கும்.

அதுமட்டுமல்ல உடல் எடைகுறைந்து அழகாகவும் சுறுசுறுப் பாகவும் இருக்க வேண்டுமென்று நினைப்பவர்கள் நீச்சல் பழகலாம். நீச்சல் அடிக்கும்போது உடலுக்கும் மனதிற்கும் நல்ல பயிற்சி கிடைக்கிறது. முக்கியமாக உடலில் இரத்த ஓட்டம் சீராக இருப்பதற்கு இது மிகவும் உதவும்.

நமது உடலில் ஏதாவது ஒரு சில இடங்களில் இரத்தம் சரியாகப் பாயாமல் இருந்தால் அதனால் சில கோளாறுகள் வரும். அப்படிப்பட்ட கோளாறுகள் வராமல் இருப்பதற்கு நீச்சல் பயிற்சி மிக நல்லது. ஆண்,பெண் இருவருக்கும் உடற்கட்டு நன்றாக அமைவதற்கு இது மிக உதவியாக இருக்கும். எந்த உடம்பு வலியாக இருந்தாலும் சரி... முதுகு வலியாக இருந்தாலும் சரி... கொஞ்சநேரம் தண்ணீரில் இறங்கி நீச்சல் அடியுங்கள் வலி பறந்து போய்விடும்.

வயிற்றுக்கோளாறு சரியாகும். கொஞ்சசேரம்:நீச்சலடித் தால் நன்கு பசி எடுக்க ஆரம்பித்துவிடும். என்ன காரணம் என்று நிnைக்கிறீர்கள்? வயிற்றில் தண்ணீர் அழுத்துகிற தல்லவா? அதனால் செரிமான உறுப்புகள் நன்கு வேலை செய்ய ஆரம்பித்துவிடும். தண்ணீர் நமது தோல் மீது தொடர்ந்து அழுத்தம் கொடுப்பதனால் தோலுக்கே ஒரு பளபளப்பு கிடைக்கிறது. இவ்வளவு நலனும் கிடைக்கும் போது அந்தப் பயிற்சியை ஏன் விட்டு வைக்கிறீர்கள்? துணிந்து தண்ணீரில் இறங்க வேண்டியதுதானே!

நான் கூட ஒருவரைப் பார்த்துச் சொன்னேன் நீச்சல் கற்றுக் கொள்ளுங்கள் சார் என்று. அதற்கு அவர் "நான் ஏற்கனவே வாழ்வில் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டிருக் கிறேன் சார்! இது எதற்கு?'' என்றார் அவர். ஏதோ கஷ்டத்தில் அப்படிச் சொல்கிறார் வேறு ஒன்றுமில்லை.

அமெரிக்காவில் 92 வருடங்களுக்கு முன்பிருந்தே பள்ளிக் கூடத்திலும் கல்லூரியிலும் நீச்சல் கலையை ஒரு பாடமாக சேர்த்திருக்கிறார்களாம். அதற்காக பாடசாலையில் நீச்சல் குளங்கள் கட்டி வைத்திருக்கிறார்கள். மாணவர்கள் அதிலும் தோச்சி பெறமுடியும். மற்ற பாடங்களில் குதிரை யோடி எழுதி விடலாம் என்று தைரியமாக இருப்பவர்கள் கூட நீச்சல் கலையில் குதிரையோட முடியாது பயிற்சி வேண்டும்.

விலங்குகளுக்கெல்லாம் நீச்சல் இயற்கையாகவே தெரியும். ஒரு நாய்க்குட்டியைத் தூக்கி தண்ணீரில் போடுங்கள். அது நீச்சலடித்து கரைக்கு வந்து சேரும். அது எங்கு கற்றுக்கொள் கிறது நீச்சலடிக்க? மனிதன் மட்டும் தான் அதைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் ஒரு மனிதனுக்கு நீச்சல் தெரியுமா என்பதை அவனைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ளவேண்டும். அவனை தண்ணீரில் தூக்கிப்போட்டு பரிசோதனை செய்துகொண்டிருக்கக்கூடாது. அப்படிச் செய்தால் நீச்சல் தெரிந்தவன் கரையைத் தேடி வந்து விடு வான. நீச்சல் தெரியாதவன் தரையைத் தேடிப் போய் விடுவான். கரைக்கு வந்து சேர்பவன் உங்களையும் சும்மா விடமாட்டான்.

கடைசியாக வேடிக்கையாக எதையர்வது சம்பிரதாய பூர்வமாகச் சொல்லி முடிக்க வேண்டும் கைவசம் ஒன்று தயா ராக இருக்கிறது. ஏதோ ஒரு பத்திரிகையில் படித்ததுதான். இருந்தாலும் அதை சொல்வதற்குக் கொஞ்சம் பயமாக இருக் கிறது. அதனால் எச்சரிக்கையாக ஒரு விடயத்தை முன்னரே சொல்லி விடுகிறேன். நன்றாக காதில் வாங்கிக் கொள்ளுங் கள. இப்போது நான் சொல்லப்போவது ஏதோ ஒரு வெளி நாட்டில் நடந்த ஒரு சம்பவம். சரிதானா? இப்போது விடயத் திற்கு வருகிறேன்.

ஒரு கணவன் மனைவி குழந்தை மூவரும் ஒரு நீச்சல் குளத்திற்கு சென்றார்களாம். அந்தக் கணவன் குளத்தில் இறங்கி நீச்சல் போட ஆரம்பித்தான். குழந்தை " நானும் குளத்தில் இறங்க வேண்டும்"என்று அடம்பிடிக்க ஆரம்பித்தது. அந்த அம்மா மிகவும் கண்டிப்பாக "நீ குளத்தில் இஙங்கக் கூடாது'' என்றார். "அப்பா மட்டும் இறங்கலாமா? அவரை ஒன்றும் சொல்லவில்லையே'' என்றது பிள்ளை. அதற்கு அந்த அம்மா "அவர் காப்புறுதி செய்திருக்கிறாரே'' என்றாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அவசரகாலச் சட்டம் மீண்டும் அமுல்

# போருக்கு சங்கு ஊதுகிறார் ஜனாதிபதி

# அடைக்கலநாதன் எம்.பி கடும் விசனம்

(கொழும்பு)

சமாதானத்தைக் குழப்பி மீண்டும் யுத்தத்தை ஆரம்பிபதற்கான ஆயத்த நடவடிக்கையாகவே அவ சரகாலச் சட்டத்தை அமுல்படுத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடிக்கை எடுத்துள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினா செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உத்தேச அவசரகாலச் சட்ட நகல் மீதான விவாதம நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.அதில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தொிவிக்கையில், அரசியல், பொருளாதார நெருக்கடிகளால் விழுங்கப்பட்டுள்ள அரசு அதிலிருந்த மீள்வதற்கு இன்று யுத்தத்தை ஒரே வழியாக தோந்தெடுத்துள்ளது. தற்போது அமுல்படுத்தத் துடிக்கும் அவசரகாலச் சட்டமானது தென்னிலங்கைக்கு அல்ல. அது தமிழர் தாயகமான வடக்கு- கிழக்கிற்கே ஆகும்.

கடந்த காலத்தில் தமிழ் மக்களை அழித்து ஒழிக கப் பயன்படுத்திய சட்டமே இதுவாகும். உதவி வழங்கும் நாடுகள் ஏற்கனவே உறுதியளித்த பாாிய நிதி உதவியை எப்படியாவது பெற்றுக்கொள்வதற்கு அரசு சமாதான முயற்சிகள் என்று கூறிக்கொண்டு சர்வதேச சமூகத் தின் முன்னால் மாயவலை விரித்து மர்மநாடகம் ஆடியது.

ஆனால் சுனாமி ஆழிப்பேரலையை அடுத்து வெளிநாட்டு உதவிகள் எதிாபாராதவாறு அள்ளு கொள்ளையாகக் கிடைத்துவிட்டன. ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்கு போதுமான நிதி அரசுக்கு வந்துவிட்டது.

ஆகவே, தற்போது யுத்தத்தை ஆரம்பிக்க அரசு தயாராகிவிட்டது. ஆழிப்பேரலையால் பாதிக்கப் பட்ட மக்களுக்கென் கிடைத்த நிதியில் அரசு முதன் முதலல் செய்த காாியம் தனது இராணுவ உயாமட் டத்தினரை ஈரானுக்கு அனுப்பி ஆயுதங்கள் வாங்கியது தான். தற்போதைய அரசு மக்களின் அபிலாஷைகளை யும் அவாகளது தேவைகளையும் தீாக்கக் கூடிய ஒரு நிாவாக அலகாகத்தொியவில்லை. தமக்கு அனாத்த நிவாரண நிதி கிடைக்கவில்லை என்று சுதந்திரதினத்தன்று சிங்கள மக்களே ஆாப்பாட்டம் செய்தனர்.

இந்த அரசு புலிகளை எல்லா வழியிலும் தப்புக் கணக்கு போட்டு வைத்துள்ளது. புலிகளது தொடாச் சியான பொறுமையை அவாகளது பலவீனம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறது. அரசு ஒன்றை மட்டும் தெளிவாகப்புாிந்து கொள்ள வேண்டும். இனியொரு யுத்தம் நடக்குமானால் தமிழ்மக்கள் அனைவரும் தமிழீழம் கிடைக்கும்வரை போராடுவாாகள் எனக் குறிப்பிட்டார். (ந-4,9)

# பாதிப்புற்ற பகுதிகளை புனரமைக்க பெல்ஜிய அரசு தொடர்ந்தும் உதவும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதி களின் புனரமைப்புக்காக மேலும் உதவிகளை வழங் கவுள்ளதாக பெல்ஜிய அரசு அறிவித்திருக்கிறது.

பெல்ஜிய வெளிவிவகார அமைச்சர் ஹரல்டி குச், இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமரை சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் புனர்நிர்மாண மற்றும் நிவாரண நடவடிக்கைகளை பார்வையிடவென இலங்கை வந் துள்ள பெல்ஜிய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக் கான பெல்ஜியத் தூதுவருடனும் சிரேஷ்ட ராஜதந்திர அதிகாரிகளுடனும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடவுள்ளார்.

பெல்ஜிய இராணுவ அணியினரால் மேற்கொள் ளப்படும் நிவாரண நடவடிக்கைகளை பெல்ஜிய தூதுக்குழுவினர் முக்கியமாகப் பார்வையிடவுள்ளனர்.

சேதமடைந்த பாடசாலைகளையும், வீடுகளை யும் புனரமைக்கவும் புதிதாகக் கட்டவும் பெல்ஜிய அரசாங்கம் உதவி வழங்கும்.

அத்துடன், இலகு கடன்களை வழங்கவும் பெல் ஜிய அரசு முன்வந்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் வேண்டுகோளுக்கமைய இலங்கை யின் கடன்பளு சம்பந்தமான விவகாரத்தில் "பாரிஸ் உதவி வழங்கும்''மகாநாட்டில் பிரஸ்தாபிக்கவும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பெல்ஜிய அமைச்சர் முன்வந்துள்ளார்.

பெல்ஜிய அரசு 3 கோடி யூரோ நாணயங்களை சுனாமி அனர்த்த நிவாரணத்திற்காக ஒதுக்கியுள்ளது.

அத்துடன், பெல்ஜிய மக்களின் பேரில் 5 கோடி யூரோவும் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப பிடத்தது. (க-7)

# 200 மெற்றிக்தொன் உணவுப்பொருட்கள் விமானநிலையத்தில் தேங்கியுள்ளதாம்

(கொழும்பு)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்க ளுககு வழங்குவதற்கென வெளிநாடுகள் மற்றும் வெளி நாட்டு நிறுவனங்களினால் கொண்டுவரப்பட்ட 200 மெற்றிக்தொன் உணவுப் பொருட்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றதாகத் தெரி விக்கப்படுகின்றது.

இநதப் பொருட்களில் குழந்தைகளுக்கான உண வுப்பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் என்பனவே பெருமளவில் காணப் படுகின்றதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் பொருட்கள் 3 மாத காலத்துக்கு மேலாக விமான நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றதாகவும் மழையுடன் கூடிய காலநிலை உருவாகுமானால் இந்த நிவாரணப்பொருட்கள் அழிவடையக்கூடிய நிலையேற் படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கொண்டு வரப்பட்ட நிவாரணப் பொருட் களில் பெருமளவானவை அரசசார்பற்ற நிறுவனங் களின் கோரிக்கையின் பேரில் அனுப்பி வைக்கப்பட்ட வையாகும். (க-8)

# அரசு சர்வாதிகார ஆட்சி நடத்த முயல்கின்றது!

(கொழும்பு)

அரசாங்கம் சர்வாதிகார ஆட்சி ஒன்றை நடாத்த முயல்வதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியி ருக்கின்றது.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அவ சரகால சட்டமூலம் தொடா்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்பிரீஸ் இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

சுனாமியைப் பயன்படுத்தி அரசாங்கம் தனது சார்வாதிகார ஆட்சியினை நடைமுறைப்படுத்த முனை வதாக அவர் தெரிவித்தார். இதனால் தான் ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு அனுமதியளித் துள்ளார் இந்த விவாதத்தில் கலந்து கொண்ட பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கருத துத் தெரிவிக்கையில், அவசரகாலச் சட்டமானது அவசியம் என்று கூறியுள் ளார்.சுனாமியால் பாதிக் கப்பட்ட பகுதிகளில் இடம் பெறும் முறைகேடுகளை கட்டுப் படுத்துவதற்கும், மீள்கட்டுமானப் பணிகளை விரைவு படுத்துவதற்கும் அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப் படுவது அவசியம் என்று தெரிவித்தார். (க-9)

## பெண்கள் மீது சேட்டைபுரிந்த

# இந்திய சாமியாருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல்

(கொழும்பு)

கொழும்பில் பெண்கள் மீது பாலியல் சேட்டை களைப் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படுகின்ற இந்திய சாமியார் ஒருவருக்கு எதிராகச் சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை யைத் தாக்கல் செய்துள்ளார்.

ஜீ. கிஷோர்சாஸ்திரி என்று அழைக்கப்படும் இந்த இந்திய சாமியாருக்கு எதிராகவே இந்தக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குற்றப் பத்திரிகையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ஆம் திகதி அல்லது அதற்கு அண மைய திகதிகளில் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மீது பாலியல் சேட்டை புரிந்ததாகக் குறிப்பிடப்பட்டி ருந்தது. (க-8)

# சுனாமி நிவாரணப் பணிகளில் புலிகள் ஈடுபடக் கூடாது

## ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்து

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நிவாரண உதவிகளை வழங்குவதில் தமிழீழ விடுதலைப்புலி கள் ஈடுபடக்கூடாது என்று ஜாதிகஹெல உறுமயவின பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரி வித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற சுனாமி விவாதத் தின் போது உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிவரும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினர் விதிமுறைகளுக்கு அமைவாக, ஒழுங்காக பணிகளை செய்கின்றார்களா என்பதில் சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது.

அந்தச் சந்தேகத்திற்குப் பதிலளிக்க வேண்டி யது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினருக்கு உண்டு என அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

# இந்தியப் பிரதமர் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் எதிர்வரும் மார்ச் மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

18 ஆண்டுகளுக்குப் பின்னர் இருதரப்பு அனுசரணையுடன் இந்தியப் பிரதமர் ஒருவா இலங்கைக்கு வருகை தரவுள்ளாா.

7 ஆண்டுகளுக்கு முன்பு அச்சமயம இந்தியப் பிரதமராக இருந்த வாஜ்பாய் சார்க் உச்சி மாநாடடில் கலந்து கொள்வதற்காக கொழும்புக்கு வருகை தந்தாா. 1987 யூலையில் மறைந்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இந்தியா, இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக இலங்கைக்கு வருகை தந்தார்.

இநதியாவுடன் நல்லுறவுகளைக் கொண்டிருக்க வேண்டுமென இலங்கை சகல அரசியல் மட்டங்களிலும் கருத்தொருமைப்பாடு நிலவுவதால் இலங்கை தொடர்பாக இந்தியா மகிழ்ச்சியான மன நிலையைக் கொண்டிருக்கிறது.

1988இலிருந்த இந்தியப் பிரதமரை இலங்கைக்கு வருகை தருமாறு நாம் அழைப்பு விடுத்துக் கொண்டு இருக்கிறோம் என்று இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க டில்லியில் கூறியிருக்கிறாா.

இருதரப்பு மட்டத்தில் 1997 இல் வெளிவிவகார அமைச்சராக இருந்த ஐ.க.குஜ்ரால் பின்னர் வெளிவிவகார அமைச்சர்களாகப் பதவி வகித்த ஜஸ்வந்த்சிங், யஸ்வத்ந் சிங்ஹா ஆகியோர் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

அதேசமயம், இலங்கையிலிருநது ஜனாதிபதி, பிரதமா ஆகியோா காலத்துக்கு காலம் இந்தியாவுக்கு விஜயங்களை மேற்கொண்டனா. தேசிய மட்டத்தில் இந்தியாவுக்கு ஆதரவான நிலைப்பாடு காணப்படுவதாகக் கூறியிருக்கும் மங்கள முனசிங்க, இந்தியா தொடாபாக ஜே.வி.பி. கொண்டிருந்த அபிபபிராயமும் தற்போது மாறிவிட்டதாகக் கூறியுள்ளார்.


'விடுதலைப் புலிகளுடனான சமாதான நடவடிக்கைகளின் நிலைவரம் மற்றும் அனுசரணையாளரென்ற ரீதியில் நோர்வேயின் ஈடுபாடு எனபன தொடாபாக இலங்கைத் தலைமைத்துவம் புதுடில்லிக்கு அறிவிக்க வேண்டும் என்பதே இந்தியாவின அபிப்பிராயமாக இருந்து வருகிறது. (ப)

## மானிப்பாய் இந்துவில் 15 ஆசிரியர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியிலிருந்து 15 ஆசிரியர்கள் ஒரே முறையில இடமாற்றப்பட்டுள்ளனர்.

ஒரேமுறையில் 15 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்ததைக் கண்டித்துள்ள தமிழர் ஆசிரியர் சங்கம், இதுதொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பணிப்பாளர் விசாகலிங்கத்தைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இச்சந்திப்பினையடுத்து, தமது இடமாற்றத்தை நிறுத்தும்படி மேன் முறையீடு செய்த ஆசிரியர்களின் மாற்றத்தைத் தற்காலிகமாக நிறுத்தும் படியும், 15 ஆசிரியர்கள் ஒரேமுறையில் இடமாற்றம் செய்தமை குறித்து விசாரணை மேற்கொள்ளுமாறும் உரியவர்களுக்கு அவர் உத்தரவிட்டுள் ளதாக தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுசசெயலாளர் மகாசிவம் வலம்புரிக்குத் தெரிவித்தார். (ச)








சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆசி வேண்டி கடந்த ஒருவார காலமாக தென்னிலங்கையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு "சர்வமத ஆசீர்வாதம்" என்ற பெயரில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பயணம் மேற்கொண்டு வரும் சர்வமதக்குழுவினர் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

யாழ்ப்பாணம் வந்த மேற்படி குழுவினர் யாழ்ப்பாணம் நாகவிகாரைக்கு விஜயம் மேற்கொண்டனர். மேற்படி சர்வமதக் குழுவினரை படங்களில் காணலாம். (படங்கள்:-நோயல்)

### நினைவு விழாவும் நூல் வெளியீடும்

செந்தமிழ் சிரோனமணி சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் '150 ஆவது ஆண்டு நினைவு விழாவும், பல்சுவைச் சுரங்கம் நூல் வெளியீடும் இன்று வெள்ளவத்தையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கததில் மாலை 5.16 மணிக்கு இடம் பெறவுள்ளது.

முனைவர் க.பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், வாழ்த்துரையை கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் பெ.விஜயரத்தினமும், புலவர் நினைவுப் பேருரையை பேராசிரியர் சி. தில்லைநாதனும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் மொரிசியஸ் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் தெ.ஈஸ்வரன் தம்பதியினர், அதிபர் ந.வாகீசன் தம்பதியினர் ஆகியோர் பொதுநல சேவைக்காக கௌரவிக்கப்படவுள்ளனர். (க)

கௌசல்யன் கொலைக்கான கண்டன விவகாரம்

## கொபி அனானின் செயலுக்கு ஹெல உறுமய கண்டனம்

(கொழும்பு)



விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் கௌசல்யன படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்த ஐ.நா.செயலாளா நாயகம் கொபி அனானை ஜாதிக ஹெல உறுமய கண்டித்துள்ளது.

உத்தேச அவசரகாலச்சட்ட நகல் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் இக் கண்டனத்தை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் போதும் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் மதான படுகொலைச் சம்பவங்களின போதும் மௌனியாக இருந்த ஐ.நா. தற்போது விடுதலைப் புலிகளின கொலைக்கு கண்டனம் வெளியிடுவது கண்டனத்துக்குரியது என்றாா.

ஐ.நா. இப்படியொரு கண்டன அறிக்கையை வெளியிடுமளவுக்கு அதனை பிழையாக வழிநடத்தியிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் இலஙகைக்கான வதிவிடப் பிரதிநிதிகள் ஆகியோரையும் கண்டிப்பதாக அவர் மேலும் கூறினார். (ப)

## முல்லையில் படகு, இயந்திரங்கள் இலவசமாக திருத்திக் கொடுப்பு

(முல்லைத்தீவு)

ஆழிப்பேரலையில் முற்றாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மீனவர்களிற்கு நம்பிக்கையூட்டி அவர்களை மீண்டும் தம் வழமையான வாழ்க்கைக்கு செல்ல உதவும் வகையில் இலண்டன் சிறீ கனக துாக்கை அம்மன் ஆலயம் 25ஆயிரம் பவுண்ஸ் செலவில் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் தொழில்நுட்ப மற்றும் முகாமைதது உதவியுடன சிலாவத்தை முல்லைத்தீவில் இலவச படகு மற்றும் இயந்திர திருத்தும் நிலையம் அமைத்துக் கொடுத்துள்ளது.

இதில் முதற்கட்டமாக் திருத்தப்பட்ட படகுகள் மற்றும் இயந்திரங்கள் கடந்த 7ஆம் திகதி மீனவர்களுக்கு வழங்கப்பட்டது. மீனவர்களின் தேவையை அறிந்து இச் சேவையை முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஒருங்கிணைத்தது.

இந்நிகழ்வில் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளா ரங்கன், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவா மாயதாஸ், தமிழர் புனா வாழ்வுக்கழக முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பாளர் திருமூர்த்தி, இலண்டன் சிறீ கனக துாக்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதிய உப தலைவர் எஸ்.நவரட்ணம், தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு திட்ட இணைப்பாளர் நவஜீவன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப)

## சர்வமதக் குழுவினர் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவிலிருந்து கடந்த 5ஆம் திகதி புறப்பட்ட சர்வமத யாத்திரைக் குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தனர்.

ஏ-9 வீதி வழியாகவே சர்வ மதங்களையும் சோந்த முக்கியஸ்தர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தனர். மாதம்பே அஸ்தஜி தேரா தலைமையிலான இந்த யாத்திரைக் குழுவில 60 போ இடம்பெற்றுள்ளனர்.

40 ஆயிரத்திற்கும் அதிகமான உயிர்களைப் பலியெடுத்து ஒரு இலட்சத்துக்கும் கூடுதலான வீடுகளை இல்லாதொழித்து, பல இலட்சக்கணக்கானவர்களின் எதிர்காலத்தையும சிதறடித்த சுனாமி கடல் அலை அனர்த்தம் ஏற்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்டது. இந்த அனர்த்தத்தில் உயிர்ப்பலியானவர்களின் உறவினர்களுக்கும், தமது உடைமைகளை இழந்து நிற்கும் மக்களுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்காக பிரார்ததனை செய்கின்றோம். இது எமது பயணத்தின் நோக்கமாகும்.

இந்த சுனாமி அனர்த்தத்தினால் தமது எதிர்காலம் சிதறடிக்கப்பட்ட எல்லோரினதும் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவது நாம் எல்லோரினதும் முன்னுள்ள மிக முக்கிய பணியாகும். இந்தக் கோர அனுபவத்தினால் ஏற்பட்ட பயம், பீதியிலிருந்து விடுபட பல நாட்கள் செல்லலாம். எல்லோரினதும் சிதறடிக்கப்பட்ட எதிர்காலத்தைக் கட்டியெழுபப பல வருடங்கள் செல்லலாம். எனினும் நாம் எமது தன்நம்பிக்கையை என்றும் இழந்துவிடக்கூடாது. இலங்கையர்களின் மிகப்பெரும் பான்மையினர் தத்தமது மதங்கள் தொடர்பான நம்பிக்கையுடன் வாழ்பவர்கள். எனவே, மதங்கள் போதிக்கின்ற விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு அன்றாட வழிகளின மூலம் எமது எதிர்கால எதிர்பார்புகளை ஏற்படுத்திக்கொள்வதோடு ஏற்பட்ட அழிவுகளிலிருந்து மீள்வதறகான தன்நம்பிக்கையுடன எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

நாடு 25 வருடகால யுத்த அனர்த்தத்தில் இருந்து விடுபட்டு, யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்காலத்தைக் கடடியெழுப்புவதற்கான முயற்சியை ஆரம்பிக்க முயற்சித்துக் கொண்டிருந்த வேளையிலேயே சுனாமி அனர்த்தம் ஏற்பட்டது. 25 வருட கால யுத்த அழிவுகளுக்குச் சமமான உயிர் மற்றும் உடைமைகளின் அழிவுகளை சுனாமி சில மணித்தியாலங்களில் ஏற்படுத்தியுள்ளது. இந்த இரு அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பும், கடமையும் அரசை சார்ந்ததாகும்.

மனிதர்களினால் விளைவிக்கப்படும் அனர்த்தங்கள் தான் சாராத இன,மத,குல,பிராந்திய, தேசிய எல்லைகளை இலக்காகக் கொண்டு ஏற்படுத்தப்படுகின்றன.ஆனால் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் மனிதர்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ள சகல எல்லைகளையும் கடந்து எவ்வித பாகுபாடுகளுமற்ற வகையில் எல்லோருக்கும் அழிவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே இதை எடுத்துக்காட்டாகக் கொண்டு, இவ் வழிவுகளிலிருந்து மீள்வதற்காக எல்லா மக்களும் எவ்வித பாகுபாடுகளோ அல்லது புறக்கணிப்புகளோ இல்லாமல் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய சந்தர்ப்பம் இதுவாகும்.

சர்வமதப் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ள நாம் பாதிக்கப்பட்ட எல்லோரினதும் எதிர்கால அபிவிருத்திக்காகவும், சுபீட்சத்திற்காகவும் பிரார்த்திப்பதோடு, ஒவ்வொரு பிரஜையினதும் தன்நம்பிக்கையுடன் தத்தமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் உங்களது முயற்சிகள் சிறந்த முறையில் நிறைவேற நாம் தொடர்ந்தும் பிரார்த்திக்க உறுதி பூண்டுள்ளோம என அவர்கள் தெரிவித்தனர். (ச-4)

## மாகாண ஆளுநர் டிரோன் முல்லைத்தீவுக்கு விஜயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பிரதேசம் தமிழர்களின் பிரதேசம் என வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான கொக்கிளாய்ப் பிரதேசத்துக்கு கடந்த வியாழக்கிழமை விஜயம் செய்த வடக்கு-கிழக்கு ஆளுநர் அந்தப் பகுதியில் வாழ்ந்து வருகின்ற சிங்கள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

இதேவேளை புல்மோட்டை 1,2,3,4 பொன்மலைக்குடா, அரிசிமலை, தேற்றவெடு தீவு ஆகிய பிரதேசத்தின் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு ஆளுநர் வராது தம்மைப் புறக்கணித்துவிட்டதாக அக்கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், கொக்கிளாய்ப் பிரதேசத்தில் தனியே சிங்களவர்கள் மட்டும் வாழ்ந்துவருவதாகவும், எனவே அவர்களின் நலனிலேயே இலங்கை அரசாங்கம் அக்கறை கொண்டிருப்பதாக அவர்கள் மேலும தெரிவித்தனர். (க-4)

# பாகிஸ்தானில் பயங்கர மழை, பனிப்புயல் அணை உடைந்ததால் கிராமங்கள் நாசம்

பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் குவாடர் மாவட்டத்தில் உள்ள பாஸ்னி அணை கடந்த வியாழக்கிழமை உடைந்ததால ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சுமார் 50பேர் இறந்தனர். நூற்றுக்கணக்கானவர்களைக் காணவில்லை. காணாமல் போனவர்களில் பலர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. அணையின் கொள்ளளவுக்கு மேல மழை நீரைத் தேக்கியதால் அது உடைந்ததாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தானில் மழை, வெள்ளம், கடும் பனியால் பலியானவர்கள் எண்ணிக்கை 52 ஆக உயர்ந்தது. பாஸ்னி அருகே அணையில் ஏற்பட்ட உடைப்பால் நான்கு கிராமங்கள் மூழ்கியுள்ளன. 16ஆண்டுகளுக்கு முன் பாகிஸ்தானில் ஏற்பட்ட கடும் பனி, மழை காரணமாக நூற்றுக்கணக்கானோர் பலியானது போன்ற நிலைதான் தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

கனமழையால் நாட்டின் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கடும் பனிப்பொழிவும் உள்ளது. மழை, வெள்ளம், சூறாவளி, வீடுகள் இடிந்தது உட்பட பல காரணங்களால் நேற்றுமுன்தினம்வரை 52 பேர் பலியாகியுள்ளனர்.

பலுசிஸ்தான் மாகாணத்தில், கடற்கரை நகரமான பாஸ்னி அருகே ஷாதிகர் அணை உள்ளது. அதில் உடைப்பு ஏற்பட்டதால் நான்கு கிராமங்கள் மூழ்கியுள்ளன. இதுவரை 20 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அதிகாரிகள அச்சம் தெரிவித்தனர். மீட்புப்பணியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

பலுசிஸ்தானையும், கராச்சியையும் இணைக்கும் நெடுஞ்சாலையில் பல பாலங்கள் வெள்ளத்தால் சரிந்துவிட்டன. நாட்டின் வடக்குப் பகுதியில் கடும் பனிப் பொழிவால் முக்கிய சாலைகள் மூடியுள்ளன. போக்குவரத்து பாதித்துள்ளது. (து)



சங்கரராமன் கொலைவழக்கில் கைதுசெய்யப்பட்ட காஞ்சி இளைய மடாதிபதி விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் நேற்றுமுன்தினம் பிணையில் விடுதலையானார். சிறையிலிருந்து வெளியே வந்த மடாதிபதிக்கு பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவரை வரவேற்க பக்தர்கள் திரளாக வந்திருந்தனர்.

WORLD NEWS உலக தரிசனம்

# டிசம்பர் 26 பூகம்பத்தால் பூமியின் சுழற்சி பாதிப்பு

கடந்த டிசம்பர் 26ஆம் திகதி நடந்த பூகம்பத்தால் பூமியின் சுழற்சியே பாதிக்கப் பட்டதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இந்தோனேஷியாவின் சுமத்ராதீவு அருகே கடந்த டிசம்பர் 26ஆம்திகதி ஏற்பட்ட பூகம்பத்தால் கடல் அலை கொந்தளித்து 'சுனாமி'யாக வந்தது. இதில் இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா உள்ளிட்ட பல நாடுகள் பாதிப்படைந்தன. இச்சம்பவத்தை ஆராயும் பணியில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். பூகம்பம் நடந்த போது பூமி சிறிது நேரம் அதிர்ந்து அதன் சுழற்சி பாதிக்கப்பட்டதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

கலிபோர்னியா தொழில்நுட்ப மையத்தின் பூகம்ப ஆய்வாளர் சென்ஜி கூறுகையில், நடந்து முடிந்த பூகம்பம் கடந்த நூறு ஆண்டுகளில் நடந்த நான்காவது மிகப் பெரிய பூகம்பம் ஆகும். பூகம்பத்தின் தாக்கத்தால் பல இடங்களில் கண்டங்கள், தீவுகள் சிறிது தூரம் நகர்ந்துள்ளன. செயற்கைக்கோள் உதவியுடன் எவவளவு தூரம நகர்ந்துள்ளன என்பது குறித்து ஆய்வு நடந்துவருகிறது. இங்கிலாந்து மற்றும் அமெரிக்க கப்பல்கள் கடலின் மேல் தளத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து ஆய்வு செய்து வருகின்றன எனத்தெரிவித்தார்.

அமெரிக்க விண்வெளி ஆய்வுமையமான நாசா விஞ்ஞானிகள் கூறியதாவது,

அலாஸ்காவில் 64ஆம் ஆண்டு ஏற்பட்ட பூகம்பத்திற்கு பிறகு பூமியை உலுக்கிய பூகம்பம் டிசம்பர் 26 பூகம்பம் ஆகும். இது பூமியின் சுழற்சியை பாதிப்படையச் செய்துள்ளது. 2.68 மைக்ரோ செகண்ட் நேரம் பூமியின் சுழற்சி பாதிக்கப்பட்டுள்ளது. இதற்காக அனைவரும் தங்களது கடிகாரங்களை திருப்பி வைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. பூமியின் சாய்வு கோணத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பூமி சுழலும் அச்சும் அதன் சுழற்சியும் இது போன்ற பூகம்பங்களால் பலமுறை மாறியுள்ளன. ஆனால மாற்றங்கள் அளவிட முடியாதபடி சிறிய அளவில் இருக்கும் என அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூகம்பத்தின் பாதிப்பாக வந்த சுனாமி அலைகள தாய்லாந்தில் இருந்து சோமாலியா வரையிலான கடலோரங்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. கடற்கரைகள், மாங்குரோவ் காடுகள், பவளப் பாறைகள் என பெருமளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3இலட்சம் எனவும் இந்தோனேஷியாவில் மட்டும் 3ஆயிரத்து 37 கோடி ரூபாய் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

உப்புநீர் நிலத்திற்கு வந்ததால் நிலப்பரப்பு உப்புத்தன்மை அடைந்துள்ளது. இரண்டு அல்லது மூன்று பருவமழைக்குப் பின்னரே அந்த உப்புத்தன்மை மாறும் எனவும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். (து)

# கின்னஸ் புத்தகத்தில் சீன அருங்காட்சியகம்

பத்தாயிரத்து எட்டு டைனோசர் முட்டைப் படிமங்களை வைத்திருப்பதால், கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் சீன அருங்காட்சியகம் இடம்பிடித்துள்ளது.

ஹியுவான் நகர அருங்காட்சியகத்துக்குத்தான் இந்தச் சிறப்பு. உலகிலேயே வேறெங்கும் இவ்வளவு டைனோசர் முட்டை படிமங்கள் இல்லை.

ஹியுவான் நகரின் ஒரு பகுதியில் சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்த போதுதான், முதல்முறையாக டைனோசர் முட்டைப் படிமங்கள் அங்கிருப்பது தெரியவந்தது. அதிலிருந்தே நகரவாசிகள் அவ்வப்போது கிடைக்கும் டைனோசர் படிமங்களைக் கொண்டு வந்து சேர்க்கின்றனர். டைனோசரின் காலடித் தடங்களும் கண்டறியப்பட்டுள்ளன என அருங்காட்சியக தலைமை அதிகாரி ஹுவாங் டாங தெரிவித்தார்.

இந்தப் படிமங்கள், 7கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சிறிய டைனோசர்களுடையவை எனச சீன அறிவியல் விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

டைனோசர் இனங்களின் பரிணாம வளர்ச்சியையும் அவை எங்கெங்கு இருந்துள்ளன என்பது பற்றியும் உண்மைகளைக் கண்டறிய இந்தக் கண்டுபிடிப்புகள் உதவும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள். (து)

# உலகிலேயே அதிக மழை பெய்யும் சிரபுஞ்சியில் குடிதண்ணீர் இன்றிக் குமுறும் மக்கள்

(ஷில்லாங்)

உலகிலேயே அதிக மழை பெய்யும் சிரபுஞ்சியிலேயே கடுமையான குடிநீர் பஞ்சம ஏற்பட்டுள்ளதையடுத்து பல கிலோமீற்றர் தூரம் சென்று தண்ணீர் கொண்டுவர வேண்டிய நிலைக்கு சிரபுஞ்சிவாசிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த அதிர்ச்சியூட்டும் தகவலை மேகா ... இல்லாமல் தவிப்பது மிகப் பரிதாபகரமானது என ஒப்புக்கொண்டார்.

சிரபுஞ்சி பகுதிக்கு வரும் சுற்றுலா வாசிகள், தங்களது தேவைக்காக பாட்டில் குடிநீரைக் கொண்டுவந்து விடுகின்றனர்.

சிரபுஞ்சியில் குடிநீர் பஞ்சம் நிலவுவதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாநில ஆளுநர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் சுட்டிக்காட்டி

# காதலியைக் கரம் பிடிக்கும் பிரிட்டிஷ் இளவரசர்

## காதல் திருமணத்துக்கு மதபீடமும் ஆதரவு

சம ஏற்பட்டுள்ளதையடுத்து பல கிலோமீற்றர் தூரம் சென்று தண்ணீர் கொண்டுவர வேண்டிய நிலைக்கு சிரபுஞ்சிவாசிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த அதிர்ச்சியூட்டும் தகவலை மேகாலயா மாநில வனத்துறை முதன்மைச் செயலர் மௌஸ்கர் தெரிவித்தார். மேகாலயா மாநிலம் ஷில்லாங்கில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஒரு விழாவில் அவர் இதைத தெரிவித்தார். அதிக மழை இருந்தும், குடிநீ

கள், தங்களது தேவைக்காக பாட்டில் குடிநீரைக் கொண்டுவந்து விடுகின்றனர்.

சிரபுஞ்சியில் குடிநீர் பஞ்சம் நிலவுவதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாநில ஆளுநர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப்பிரச்சினைக்கு மழைநீரைச சேகரிக்காமல் இருப்பதும், வனங்களை அழிப்பதும் காரணங்களாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

(து)

# பிரிட்டிஷ் இளவரசர்

## காதல் திருமணத்துக்கு மதபீடமும் ஆதரவு

நீண்டநாள் காதலியான கமீலாவை மணக்கிறார் பிரிட்டன் இளவரசர் சார்லஸ். இதை அவரது அலுவலகம் அறிவித்துள்ளது.



இத்திருமணத்தைப் பற்றி மேற்கொண்டு விவரங்களை சார்லஸின் அலுவலகம் தெரிவிக்கவில்லை. எனினும் ஏபரல் 6ஆம் திகதி திருமணம் நடைபெறும் என ஸ்கை நியூஸ் ரீவி கூறியுள்ளது.

சார்லஸ்- டயானா தம்பதி விவாகரத்துப் பெற்றபிறகு, 1997இல் பாரிஸில் நடைபெற்ற விபத்தில் டயானா இறந்துவிடடார். அதன்பிறகு சார்லஸ் மறுமணம் செய்துகொள்ளும் சூழல் உருவாகியுளளது.

சார்லஸ் மணந்துகொள்ளபபோகும் கமீலா பார்க்கர் பவுல்ஸ் ஏற்கனவே விவாகரததுப் பெற்றவர். அவரது முன்னாள் கணவர் இன்னும் உயிருடன் இருக்கிறார். சார்லஸ்-கமீலா திருமணம் மிக முக்கியமான விஷயமாகக் கருத்தப்படுகிறது.

இங்கிலாந்தைப் பொறுத்தவரை யார் மன்னரோ, அவர்தான் நாட்டில் உள்ள தேவாலயங்களுடைய பதவி வழித் தலைவராவார். விவாகரத்துப்பெற்றவர்கள் மறுமணம் செய்துகொள்ளக் கூடாது என்பது மத பழமைவாதிகளின் கருத்து. அப்படியிருக்க, தேவாலயத்தின் உயர் நிர்வாகப் பதவிக்குச் செல்லும சார்லஸ் கமீலாவை எவ்வாறு மறுமணம் செய்வது என்ற கேள்வி எழுந்துளளது.


எனினும் சார்லசும் கமீலாவும் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என கான் டர்பெரி தலைமைப் பேராயர் ஜார்ஜ் கெரே கருத்துத் தெரிவித்துள்ளார்.

சார்லசும கமலாவும் திருமணம் செய்து கொள்ளலாமா என்பது குறித்து கடந்த ஆணடில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. 32 சதவீதத்தினர் திருமணத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். 29 சதவீதத்தினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். 32 சதவீதத்தினர் இந்த விவகாரம் குறித்து தங்களுக்கு எவ்வித அக்கறையுமில்லை என்றனர். 2சதவீததத்தினர் கருத்து தெரிவிக்கவில்லை.

(து)



**இந்தியாவில் குடியரசுத் தலைவர் மாளிகை வளாகத்திலுள்ள முகலாயர் தோட்டம் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. காஷ்மீரின் அழகு மிகு தோட்டங்களைப்போன்று உருவாக்கப்பட்டுள்ள இதை வடிவமைத்தவர் பிரிட்டிஷ் தோட்டக் கலைஞராவார். தோட்டத்தில் மலர்ந்துள்ள அல்லி இனத்தைச்சேர்ந்த அரிய மலர்கள்தான் இவை.**



'மாயாவி'
சூர்யா, ஜோதிகா

## கலக்கல் கருணாஸ்

'தேவதையைக் கணடேன்' படத்தில் நாயகன் தனுசுடன் படம் முழுக்க வந்து கலகலப் பூட்டியவர் கருணாஸ். அவருக்கு இப்படம் ஒரு மைல் கல்லாய் அமைந்தது.

பொலிஸ் ஸ்டேஷனில் அடிவாங்கிவிட்டு இனஸ்பெக்டரிடம் புருகாப்பி கேட்பது, தனுஷ் புதிதாக வாங்கிய சைக்கிளை கிண்டல் செய்வது, காதல் துரோகம் செய்த பெண்ணை அடிக்கப் பாய்வது என காமெடி, சென்டிமெண்ட் இரண்டிலும் அசத்தினார். இதனால் அவருக்கு மறுபடியும் 'மார்க்கெட்' சூடுபிடித்துள்ளது.

## ரஜினியின் சென்டிமெண்ட்

தெலுங்கில் வெற்றி பெற்ற 'ஆரியா' படம் இப்போது தமிழில் தனுஷ் நடிக்க தயாராகவிருக்கிறது. ரஜினிக்கு சில சென்டிமெண்ட்ஸ் உண்டு. கதை விவாதத்தில் பஞ்சு அருணாசலம், நடனத்தில் புலியூர் சரோஜா பங்கெடுத்தால் வெற்றி என்கிற சென்டிமெண்ட்தான் அது.

தன் மருமகன் தனுஷின் இந்தப் புதிய படத்திலும் இருவரையும் பங்கெடுக்கச் சொல்லி இருக்கிறாராம் ரஜினி.

'பச்சை குதிர' என்ற படத்துக்கு திரைக்கதை, வசனம் எழுதி வருகிறார் பார்த்திபன்.

* * *

வானம் வசப்படும் கார்த்திக்குமார் 'கண்டநாள் முதல்' படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடிக்கிறார்.

* * *

ரேவதி இயக்கத்தில் ஒரு படத்திலும் 'தமபி', 'பிரியசகி' ஆகிய படஙகளலும் நடிககிறார் மாதவன்.



## கண்...

### திரை ...

கரு...
வசனத்தில்
படம்.
கழனி
வசிக்கும் அ
பர்கள். ஆன
டாக்டருக்கு
மதன்.
மருத்து
மீது கார் டி
ஸில பிடித்துக்கொடுக்கிறாள். இதனால்
கண்ணம்மா முகத்தில் அசிட் வீச ஆனந்
காப்பாற்றுகிறான். இருவருக்கும் நட்பு
மதனுக்கு அதே கண்ணம்மாவை அ
செய்ய திருபபம... தான் கெட்டவன் என்று
ஆனந்தன், கண்ணம்மா திருமணத்தை
ஆனந்தனுக்கு இராணுவ மருத்துவகுழு
அவன் எலலைககுப் போகிறான். அங்கு ப
இறந்ததாகச் செயதிவர கணணமமா நொறு
இழக்கிறாள். இதனால் அவள் தந்தை
ஆதரவற்ற கண்ணம்மாவை மதன் த
வர.... அவன் மனைவி மாலாவுக்கு எரிச்சல்.
மதன்தான் காரணம் என்று அவள் சந்
ஒருகட்டத்தில் சுயநினைவு இல்லா
வீட்டைவிட்டு வெளியேறி ஒரு கிராமததுப்
கலமாகிறாள். அங்கு அவளுக்கு பெண்குழ
திரும்புகிறது.
அவள் வாழ்வில் கார் டிரைவர் மீ
கண்ணம்மா தன் மனைவி குழந்தையும்
வையுங்கள் என்று பஞ்சாயத்தில் முறை
தாரும பொலிஸும் அவன் பக்கம் சேர்ந்து
மக்ஸ்.
நீண்ட இடைவெளிக்குப் பிறகு கரு
செந்தமிழ் வீச்சு தெறிக்கிறது.
கணணம்மாவைப் பதம் பார்க்க வரு
முதுகில் தடுத்துக் காயப்படும் ஆனந்தன்.
கும் மார்பைக் காட்டுகிறவன் தமிழன். நான்
முதுகைக் காட்டிவிட்டேனே' என்று பேசு
'கண்ணம்மா இல்லாமல் வீடு வெ
எனறு குயிலி சொல்ல, 'கண்ணகி சில
வெறிச்சோடிக்கிடக்கிறது' என்று வையாபு
கிண்டல்.
'தினமும் புரட்டி நான் எழுதுகிற ப
காயுறப்ப அணை திறக்காம மழை வந்
போனப்புறம் அணை திறந்தா என்ன பிர
முழுக்க கருணாநிதியின் பேனா கவிதை
கண்ணம்மாவாக வரும் மீனா தென்
மாறுகிறார். பாத்திரத்துக்குக் கச்சிதம்
செய்திகேட்டு அலறித்துடித்து புத்திபே
குழந்தையைப் பணயமாக்கி கற்பை கள
வரைச் சுட்டுதள்ளுவது அனல். கிளைமா
கருணாநிதி வசனங்கள் தீப்பொறி...
ஆனந்தனாக வரும் பிரேம்குமாரும்
கட்டும் சின்னத்திரையில் ஈர்த்தவர்கள்.
டாக்டராக மனதில் நிற்கிறார்.
வெங்கட் நட்புக்கு இலக்கணமாய்
மனைவியுடன் தன்னை இணைத்துப் பேசும்
விரட்டுவது ஆவேசம்.
மாலாவாக வரும் விந்தியா அழகான
கொல்ல காளையை அவிழ்த்துவிடுவது
கவர்ச்சி விருந்துபடைக்கிறார். வையாபுரி
சந்திரசேகர், பாலாசிங், குயிலி, வ
ஒவ்வொருவரும் துடிப்பான பாத்திரங்கள்.
கருணாநிதியின் 'இளைஞனே இ
உணர்ச்சிப்பிழம்பு. வைரமுத்துவின் 'கை
கண்ணம்மா பாடல், வாலியின் 'எததனை எ
பாடல்கள் தாளலயம். எஸ்.ஏ.ராஜ்குமாரின்

**கண்ணம்மா - கலக்குகிறாள்.**

## சோனியா அகர்வாலுடன் நடிக்க தனுஷுக்கு ஐஸ்வர்யா தடை

செல்வராகவன் தயாரிப்பில் சோனியா அகர்வாலுடன் புதுப்படம் ஒன்றில் தனுஷ் நடிப்பதாக இருந்தது.

உங்கள் அண்ணனோட காதலியை நீங்க முத்தம் கொடுப்பது போன்ற காட்சிகளில் நடிக்கவேண்டுமா? எனக்கூறி சோனியா அகர்வாலுடன் நடிப்பதற்கு தனுஷிற்குத் தடைபோட்டுவிட்டாராம் அவரது மனைவி ஐஸ்வர்யா. இதனால் தனுஷின் அடுத்த படத்தில் நடிக்க வேறு நாயகியைத் தேடிக்கொண்டிருக்கிறார்களாம்.




'சச்சின்'
ஹரிணி



'அமுதே'
ஜெய் ஆகாஷ், மதுமிதா

## புதிய அவதாரம் எடுக்கும் சரத்குமார்!




'ஐயா' படத்தில் சரத்குமாரின் நடிப்பைப் பார்த்து விருது கிடைக்கும் என எல்லோரும் பாராட்ட மிகவும் சந்தோஷத்தில் இருக்கிறார் சரத்.

அந்த உற்சாகத்தோடு அவர் செய்திருக்கிற ஒரு காரியம், தானே ஒரு புதிய படத்திற்குக் கதை, திரைக்கதை, வசனம் எழுதிவைத்திருப்பதுதான்.

இந்தப்படத்தில் யோகி என்பது சரத்தின் பெயர். 'யோகானந்த சாஸ்திரி' என்பது படத்தின் பெயர். ஏற்கனவே தயாரிப்பாளராக அவதாரம் எடுத்திருக்கிற சரத், இந்தப் படம் மூலம் டைரக்டராகவும் அவதாரம் எடுப்பாரோ? இதுபற்றி சரத்திடமே கேட்டபோது,

'யோகானந்த சாஸ்திரி' மிக அருமையான தை. ஒரு பெரிய புரட்சிக் கருத்தையே உள்வைத்திருக்கிற கதை அது. ஆனால், இநதப் படத்தை நானோ, வேறு இயக்குநர்களோ இயக்கினால் சரிப்படாது. இந்தப் படத்தை இயக்குவதற்கு மிகப் பொருத்தமானவர் கே.பாலச்சந்தர்தான். அவர் மட்டும் இந்தப் படத்தை இயக்கினால், தமிழ் சினிமாவுக்குப் பெரிய திருப்புமுனையாக இப்படம் அமையும் என்றார்.





# கண்ணம்மா

## திரை விமர்சனம்

கருணாநிதியின் திரைக்கதை வசனத்தில் உருவான. குடும்பப் படம்.

கழனிப்பகாக்கம் கிராமத்தில் வசிக்கும் ஆனந்தனும் மதனும் நண்பர்கள். ஆனந்தன் ஏழை. அவனை டாக்டருக்குப் படிக்கவைக்கிறான் மதன்.

மருத்துவ மாணவி கண்ணம்மா மீது கார் டிரைவர் ஆசைப்பட பொலி...றாள். இதனால் கோபமாகும் டிரைவர், ...அசிட் வீச ஆனந்தன் குறுக்கே பாய்ந்து ...ருக்கும் நட்பு ஏற்பட்டு காதலாகிறது. ...ண்ணம்மாவை அவள் தந்தை நிச்சயம ... கெட்டவன் என்று மதன் நாடகம் ஆடி ... திருமணத்தை முடித்துவைக்கிறான். ...வ மருத்துவகுழுவில் வேலை கிடைக்க ...கிறான். அங்கு பனிப்புயலில் சிக்கி அவன் ...கண்ணம்மா நொறுங்கிப்போய் சுயநினைவை ... அவள் தந்தை அதிர்ச்சியில் சாகிறார். ...மாவை மதன் தன் வீட்டுக்கு அழைத்து ...லாவுக்கு எரிச்சல். கண்ணம்மா கர்ப்பமாக ...ன்று அவள் சந்தேகப்படுகிறாள். ...பநினைவு இல்லாமலேயே கண்ணம்மா ... ஒரு கிராமதது்ப் பெண்ணிடம் அடைக் ...வளுக்கு பெண்குழந்தை பிறக்க நினைவு

...கார் டிரைவர் மீண்டும் குறுக்கிடுகிறான். ...வி குழந்தையும் என்னுடையது. சேர்த்து ...சாயத்தில் முறையிடுகிறான். பஞ்சாயத ...ன் பக்கம் சேர்ந்து ஆமோதிக்க கிளை

...க்குப் பிறகு கருணாநிதி வசனத்தில் ...க்கிறது.

...தம் பார்க்க வரும் அசிட் முட்டையை ...ப்படும் ஆனந்தன். 'வாளுக்கும் வேலுக் ...வன் தமிழன். நான் முட்டைக்குப் போய ...னே' என்று பேசும் வரிகள் பளிச. ...ல்லாமல் வீடு வெறிச்சோடிக்கிடக்கிறது' ... 'கண்ணகி சிலை இல்லாமல் பீச்சு ... என்று வையாபுரியைப் பேசவைப்பது

...நான் எழுதுகிற டயரி நீதானே..', 'வயல ...காம மழை வந்து பயிர் அடிச்சிட்டு ...ந்தா என்ன பிரயோசனம்' என படம் ... பேனா கவிதை வடித்துள ளது.

...ரும் மீனா தென்றலாய் வீசி புயலாய் ...க்குக் கச்சிதம். கணவன் இறந்த ...வடித்து புத்திபேதலிப்பது உருக்கம். ...க்கி கற்பை களங்கப்படுத்தும் டிரை ... அனல். கிளைமாக்சில் அவர் பேசும் ... தீப்பொறி...

... பிரேம்குமாரும் மதனாக வரும் வெங் ...ல் ஈர்த்தவர்கள். பிரேம்குமார் நல்ல ...கிறார்.

... இலக்கணமாய் ஒளிர்கிறார். நண்பன் ...ணைத்துப் பேசும் மனைவியை அடித்து

...விந்தியா அழகான ராட்சசி. மீனாவைக் ...விழ்த்துவிடுவது திக்..திக். நடனத்தில் ...கிறார். வையாபுரி சிரிக்கவைக்கிறார். ...சிங், குயிலி, வடிவுக்கரசி, முத்தரசி ...ன பாத்திரங்கள்.

... 'இளைஞனே இளைஞனே..' பாடல் ...ரமுத்துவின் 'கைகொடு கைகொடு...' ...யின் 'எததனை எததனை, கிகசி, கிசசி ...ஸ.ஏ.ராஜ்குமாரின் இசை-இனிமை. ...ா - கலக்குகிறாள்.





# காதலர்களைக் காப்பாற்றும் விஜய்


விஜய் தற்போது நடித்துக்கொண்டிருக்கும் படம் 'சுக்ரன்'. இது செக்ஸ்,ரொமான்ஸ் இல்லாத காதல் கதை.

சிலருக்கு வாழ்கைகை பற்றித் தெரியாது. ஆனால் வாழ ஆசைப்படுவார்கள். காதல் பற்றி முழுசாத் தெரியாது. ஆனால் காதலிக்க விரும்புவார்கள். காதலுக்காகப் போராடவேண்டும் என்று முடிவு செய் வார்கள். ஆனால் போராடத்தெரியாது. இப்படியாக அவதிப்படுபவர்களை விஜய் வந்து காப்பாற்றுகிறார். அதுதான் 'சுக்ரன்' படத்தின் கதை.



டைரக்டர் சுசி கணேசனை போனிலும் நேரிலும் விடாமல் துரத்திக்கொண்டிருக்கிறார்கள் இளம் பெண்கள். காரணம் பிரசாந்த் -சுசிகணேசன் கூட்டணியில் உருவான 'விரும்புகிறேன்' படம் மூலம் தான் புன்னகை இளவரசி சினேகா அறிமுகமானார். இப்போது பிரசாந்த் - சுசி மீண்டும் சேர்ந்திருக்கும் 'சக்கர' படத்தில் ரீமாசென்தான் கதா நாயகி என்றாலும் மேலும் இரண்டு கதாநாயகிகள் கதை யில் உண்டு, இதற்காக சுசி புதுமுகவேட்டை நடத்த, நூற்றுக்கணக்கான இளம்பெண் கள் அப்ளிகேஷன் போட்டுவட்டு ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

# சூர்யாவின் உடற்பயிற்சி



சேலம் ஏ.சந்திரசேகரன் தயாரிப்பில் சூர்யா நடிக்கும் 'கஜினி' அக்ஷன் படமாக உருவாக உள்ளது.

இப்படத்துக்காக சூர்யாவின் உடல் முற்றிலும் மாற்றப் படுகிறது. இதற்கு விசேஷ பயிறசியளிக்க மும்பை நிபுணர் ஒருவர் வரவழைக்கப்பட்டுள்ளார்.

இவர் ஹிந்தி நடிகர்களுக்குப் பயிற்சியளித்தவர். இந்த நிபுணர் சூர்யாவுடன் இரண்டு மாதங்களாகத் தங்கியிருந்து என்னென்ன உணவுகள் சாப்பிட வேண்டும், எந்தெந்த உடற்பயிற்சிகள் செய்யவேண்டும் என்று வகுப்பெடுத்துவருகிறாராம்.


## சக நடிகைக்கு டோஸ் விட்ட 'தென்றல்' நடிகை

'மாஉ' நடிகை கவர்ச்சி காட்ட மறுத்ததால் வாய்ப்புகள் வரிசை கட்ட மறுக்கிறது. சில நடிகைகள் அவரிடம் தாராளமாக நடந்து கொள்ளும்படி அட்வைஸ் செய்ய இதுவரை கவர்ச்சி காட்டியவர்கள் என்ன கிழித்து விட்டார்கள் என்று பதிலுக்கு ஒருபிடி பிடித்தாராம் நடிகை.

தொடை நடிகை 'ரன்' படத்தில் ஒரு பாட்டுக்கு ஆடவுள்ளார்.

அட்வான்ஸ் வேண்டாம் மொத்தப பணமும் வேண்டும் என்று வாங்கிக்கொண்ட பிறகுதான் ஆடச் சம்மதித்தாராம்.

# மூத்த நடிகர்களுடன் நடிப்பதால் சந்தோசம்தான் – நயன்தாரா



'ஐயா' படத்தில் சரத் குமாருக்கு ஜோடியாக நடிதது தமிழில் அறிமுகமானவர் நயன்தாரா.

தற்போது ரஜினிகாந்த் ஜோடியாக 'சந்திரமுகி' யில் நடித்துவருகிறார்.

கேரளாவைச் சேர்ந்த இவர் ஏற்கனவே 'மனஸினக்கரை' படத்தில் ஜெயராம் ஜோடியாக நடிததார். இந்தப படம் மூலம்தான திரையுலகில் அறிமுகமானார்.

ரஜினிகாந்த், சரத்குமா, மோகன் லால், ஜெயராம் போன்ற மூத்த நடிகர்களுடன் ஜோடியாக நடிப்பது ஏன்? என்று நயன்தாராவிடம் கேட்போது அவர் கூறியதாவது,

**திரையில் என்னைப் பார்ப்பவர்கள் நான் வயதுக்குமீறிய தோற்றத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த தோற்றம்தான் எனக்கு மூத்த நடிகர் களுடன் நடிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.**

**வயதில் மூதத நடிகர்களுடன் நடிப்பதால் எனக்குக் கொஞ்சமும் வருத்தமில்லை, சந்தோஷம்தான். மூத்த நடிகர்கள் எல்லோருமே பெரிய நடிகர்கள்தான். 'ஐயா' படத்திலும் 'சந்தரமுகி' படத்திலும் எனக்குக் கவர்ச்சியாக நடிக்கும் நிலைமை ஏற்படவில்லை.**

**வேறு படங்களில் நான் நடிக்கப் போகும் வேடங்களுக்குக் கவர்சசி அவசியம என்றால் ஓரளவுக்குக் கவர்ச்சியாக நடிப்பேன். நான் ரஜினிகாந்தன் ரசிகை. அவர் நடித்த பல படங்களைப் பார்த்துளளேன். அவருடன் சேர்நது நடிக்க வாய்பபுக்கிடைத்தது பெரிய் அதிர்ஷ்டம்.**

இவ்வாறு நயன்தாரா கூறினார்.



# எங்கள் பள்ளி

சேர்த்து விட்டார் பெற்றோர்கள்
சிறுவர் எம்மைப் பள்ளியில்!
பார்த்துங் கேட்டும் இங்கே நாம்
பாடங் கற்றே ஓங்குவோம்!

சிறுவர் எங்கள் பள்ளியில்
சேர்ந்தி ருப்போர் அறிவினால்,
சுறுசுறுப்பால் ப,மியைச்
சொர்க்க மாக மாற்றுவோம்!

உள்ள தொழில்கள் யாவையும்
உலக மெங்கும் நாட்டுவோம்!
கொள்ளை செல்வம் நாடெல்லாம்
குவியும் வழிகள் கூட்டுவோம்!

ஓவியங்கள் தட்டுவோம்
உளியின் சிலைகள் நாட்டுவோம்
காவியங்கள் ஆக்குவோம்
கலைகள் யாவும் போற்றுவோம!

ச. வே. பஞ்சாட்சரம்.

# பொது அறிவு

1.ஆபிரிக்கா கண்டத்தில் அபிவிருத்தியடைந்த ஒரேயொரு நாடு எது?

2.தனது தேசப்படத்தையே தனது தேசியக் கொடியில் பொறித்த நாடு எது?

3.பால்வெளியில் எத்தனை சதவீதம் நட்சத்திங்கள உள்ளன?

4.விண்வெளியில் நடந்த முதல் பெண்மணி என்ற பெருமையைப பெற்றவர் யார்?

5.ஐக்கிய அமெரிக்காவில் 'பென்ரகனில்' எடுக்கும் தீர்மானங்கள் எவை பற்றியதாகும்?

சொ.நித்தியா, கொக்குவில்.

# கண்டுபிடியுங்கள்

**சிறுவர்களே! இங்கே 12 விலங்குகள் மறைந்து இருக்கின்றன. அவை என்ன என்பதைக் கண்டுபிடித்து வரிசைப்படுத்துங்கள் பார்க்கலாம்?**



# விடுகதைகள்

1.கறுப்புத் தோட்டத்தில வெள்ளை விதைகள். அறிவுக்கு விருநதாகும அடுத்தநாள் புதிதாகும். அவை என்ன?

2.வீடு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை. அவன் யார்?

3.காற்றில் அசைபவன், காற்றிலே இசைவான். அவன் யாா?

4.நாளுக்கு நாள் மெலிவான், நாளும் சொல்லுவான். அவன யார்?

5.தண்ணீரில் நீந்தி வருவான். தரையில் தாண்டித் திரிவான். அவன் யார்?

வி.சர்மிளா, யா/வசாவிளான் ம.வி.

## விடைகள்

கண்டுபிடியுங்கள்
1.ஒட்டகம் 2.வரிக்குதிரை 3.பபின் 4.எருமை மாடு 5.சீல் 6.வால்ரஸ் 7.பண்டா 8.புலி 9.யானை 10.பெங்குயின் 11.மான் 12.ஆந்தை.

பொது அறிவு -1.தென் ஆபிரிக்கா 2.சைப்பிரஸ் 3.98 சதவீதம் 4.ஸ்வெத்லேனா ஸ்விட்ஸ்கயா 5.பாதுகாப்புத்துறை.

விடுகதைகள் - 1.கரும்பலகை, சோக்கட்டி 2.செருப்பு 3.மூங்கில் 4.கலண்டர் 5.தவளை

பெரியாரோடு சேர்ந்தால் யாருக்குத்தான் உயர்வில்லை. தாமரைமேல் இருக்கும் நீர்த்துளி முத்துப்போல் ஒளி பெறுகிறதே.
-ஔவை

முன்னேற்றப்படிகளில் ஏறும் போது வழியில் சந்திப்பவர்களிடம் அன்பாய் இரு. ஏனென்றால் இறங்கும்போது அவரைச் சந்திக்கவேண்டியிருக்கும்.
-விவேகானந்தர்.

# சிறுவர் அரங்கம்

## நல்ல குணமே நாட்டைக் காக்கும்!

வீரபூபதி என்றொரு மன்னன் ஒருசமயம் வளநாட்டை ஆண்டுவந்தான். நீண்டநாட்களாக அவனுக்கு அண்டை நாடாகிய கங்கநாட்டைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்று ஆவல்.

ஆனால், வீரபூபதியின் ஆவல் அவ்வளவு எளிதில் நடைபெறக்கூடியதல்ல. ஏனெனில் கங்கநாட்டு மக்கள் தாய்நாட்டின் மேல் அளவற்ற அன்பு கொண்டவர்கள். அனைவரும் ஒன்று திரண்டு எதிர்த்தால் வீரபூபதியின் படை அவர்கள் முன் நிற்காது சிதறி ஓடிவிடும்.

ஆயினும் வீரபூபதி தன் ஆசையைவிட்டு விடவில்லை. எப்படியாவது கங்கநாட்டைக் கைப்பற்றித் தன் நாட்டுடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆவலை விடவில்லை. தக்க சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒருநாள் தனது மந்திரியை அழைத்து, "மந்திரியாரே, நீங்கள் மாறுவேடமணிந்து கொண்டு கங்கநாட்டிற்குச் செல்லுங்கள். அங்குள்ள மக்களிடம் பழகி அவர்களுடைய மனப்பான்மையைத் தெரிந்துவாருங்கள்" என்று கூறினான் வீரபூபதி.



மந்திரியும் மாறுவேடமணிந்துகொண்டு கங்கநாட்டிற்குச் சென்றார். மக்கள் அனைவரும் ஒரு குறையும் இன்றி மகிழ்ச்சியுடன் இருப்பதைக் கண்டார். பிறகு கடைத்தெருவிற்குச் சென்று அங்குள்ள பழக்கடை ஒன்றிற்குச் சென்றார்.

கடைக்காரன் அவரை அன்புடன் வரவேற்றான்.

"வாருங்கள் ஐயா, உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று மந்திரியைப் பார்த்துக் கேட்டான் கடைக்காரன்.

"ஐயா, எனக்கு வாழைப்பழங்கள் வேண்டும். தங்களிடம் இருக்கிறதா?" என்று கடைக்காரனிடம் கேட்டார் மந்திரி.

"ஐயா, என்னிடம் வாழைப்பழங்கள் உள்ளன. ஆனால் அவை புதியவை அல்ல. அழுகிப் போய் உள்ளன. பக்கத்துக் கடைக்காரரிடம் நல்ல பழங்கள் உள்ளன. அவரிடம் சென்று வாங்கிக்கொள்ளுங்கள்'' என்றான் கடைக்காரன்.

மந்திரி அடுத்த கடைக்குச் சென்றார். சில வாழைப்பழங்களை வாங்கிக்கொண்டார். பிறகு ஒரு வெண்ணெய்க் கடைக்குச் சென்றார்.

வெண்ணெய்க் கடைக்காரனும் மந்திரியை இன்முகத்துடன் வரவேற்றான்.

"ஐயா, எனக்குக் கொஞ்சம் வெண்ணெய் வேண்டும்" என்று வெண்ணெய்க் கடைக்காரனிடம் கேட்டார் மந்திரி.

"ஐயா, என்னிடம் புதிய வெண்ணெய் கைவசமில்லை. தாங்கள் எதிர்க்கடைக்குச் சென்றால் தங்களுக்கு நல்ல புதிய வெண்ணெய் கிடைக்கும்" என்று கூறினான் வெண்ணெய்க் கடைக்காரன்.

மந்திரியும் எதிர்க்கடைக்குச் சென்று வெண்ணெய் வாங்கிக்கொண்டார். பிறகு தமது நாட்டிற்குத் திரும்பிச் சென்றார்.

வளநாட்டு மன்னன் அவரிடம்,

"என்ன செய்தி, எப்படியிருக்கிறது நிலைமை? இப்பொழுது நாம் படையெடுத்துச் செல்லக்கூடியளவுக்கு நிலைமை உள்ளதா?" என்று கேட்டான்.

"அரசே, இப்பொழுது கங்க நாட்டின் மேல் படையெடுப்பதால் எவ்விதப் பயனும் இல்லை. இன்னும் சிறிதுகாலம் பொறுத்துப் பார்ப்போம்" என்றார் மந்திரி.

சிறிது காலம் சென்றது.

வளநாட்டு மன்னன் மீண்டும் மந்திரியை கங்கநாட்டிற்கு அனுப்பினான். மந்திரி மாறுவேடமணிந்துகொண்டு கங்கநாட்டுக்குச் சென்றார். முன்பு சென்ற பழக்கடைக்கே மறுபடியும் சென்றார்.

அவரைக் கண்டதும் பழக்கடைக்காரன், "வாருங்கள் ஐயா! உங்களுக்கு என்ன வேண்டும்? ஆரஞ்சுப்பழமா? அன்னாசிப்பழமா? வாழைப்பழமா? எது தேவை? என்னிடம் உள்ளவை அனைத்தும் புதியவை. மற்றக் கடைக்காரர்களிடம் அழுகிப்போன பழங்கள்தான இருக்கும். அவர்களிடம் வாங்கி ஏமாந்துவிடாதீர்கள்'' என்று கூறினான்.

மந்திரி அவனிடம் சில வாழைப்பழங்களை வாங்கிக்கொண்டார். அவைகளைப் பார்த்ததும் அனைத்தும் அழுகிப்போனவை என்று தெரிந்துகொண்டார். ஆயினும் கடைக்காரனிடம் ஒன்றும் பேசாமல் காசைக் கொடுத்து விட்டுச் சென்றுவிட்டார்.

மீண்டும் பழைய வெண்ணெய்க் கடைக்காரனிடம் சென்றார். மந்திரியைப் பார்த்ததும் வெண்ணெய்க் கடைக்காரன்,

"வாருங்கள், புதிய வெண்ணெய் வந்துள்ளது. உங்களுக்கு எவ்வளவு வேண்டும்? மற்றக் கடைக்காரர்களிடம் செல்லாதீர்கள். அவர்களிடம் சென்றால் உங்களை ஏமாற்றி விடுவார்கள். அவர்களிடம் உள்ளவை அனைத்தும் பழைய சரக்கு'' என்றான்.

மந்திரி அவனிடம் கொஞ்சம் வெண்ணெய் வாங்கினார். பிறகு வெளியே வந்து அதனை முகர்ந்து பார்த்தார். 'புளித்தவாடை' அடித்தது.

மந்திரி கடைக்காரனிடம் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை. நேரே தம்முடைய நாட்டிற்குச் சென்று, மன்னனைக் கண்டார்.

"அரசே, கஙகநாடடின்மது படையெடுகக இதுவே சரியான சமயம். உடனே கங்க நாட்டின் மீது படையெடுப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்றார் மந்திரி.

"எனன காரணத்தினால அபபடிச் சொல கிறீர்கள்? சிறிது விளக்கமாகக் கூறுங்கள்'' என்றான் வளநாட்டு மன்னன்.

முதலில் நான் சென்றபோது அந்நாட்டு மக்கள் ஒற்றுமையுடனும், ஒருவருக்கொருவர் அனபுடனும் பழகிவந்தார்கள். அம்மாதிரியான சமயத்தில் நாம் படையெடுப்பது உசிதமல்ல என்று எனக்குத் தோன்றியது. இப்பொழுது நிலைமை தலைகீழாகிவிட்டது. அந்நாட்டு மக்கள் பொய் பேசுபவர்களாகவும், ஒருவர்மீது ஒருவா பொறாமை கொணடவர்களாகவும விளங்குகிறார்கள். சுயநலமிகளாகவும், பொய்யர்களாகவும் விளங்குகிற இவர்களை இபபோது முறியடிப்பது மிகவும் எளிது" என்றார் மந்திரி.

மந்திரி கூறியவாறே வளநாட்டு மன்னன கங்கநாட்டின்மீது படையெடுத்தான்.

கங்கநாட்டு மக்கள் அனைவரும் பொயயர்களாய், சுயநலமிகளாய், பேராசை பிடித்தவளர்களாய் இருந்ததால் விரைவிலேயே அந் நாடு வளநாட்டிடம் அடிமைப்பட்டது.

# வருமுன் காப்போம்; விபத்துக்களை தவிர்ப்போம்

விபத்து எந்நேரமும் எவ்வி டத்திலும் நிகழக்கூடிய விரும் பத்தகாத ஒரு சம்பவமாகும். அதாவது விபத்துக்கள் வேலைத் தளத்திலோ, வீட்டிலிலோ அல் லது பிரயாணம் செய்யும் பொழுதோ சம்பவிக்கலாம். விபத்துக்கள் நிகழும் இடத்தைக் கொண்டு அதற்குரிய பாதுகாப்பு முறையினை இருவகைகளாகப் பிரிக்கலாம்.

1. வேலை செய்யுமிடத்துப் பாதுகாப்பு
2. வேலையற்ற நேரத்தில் பாதுகாப்பு

**1 வேலை செய்யுமிடத்துப் பாதுகாப்பு**

உரிய பாதுகாப்பற்ற நட வடிக்கையும் பாதுகாப்பற்ற நிலையும் விபத்து ஏற்படுவதற் குரிய காரணிகளாகும். மேற் குறிப்பிட்டவற்றை நீக்கமுடியு மானால் விபத்து ஏற்படுவதைத் தடுக்கலாம். பாரதூரமான விபத் துக்கள் நிகழும் இடங்களை ஆராய்ச்சியாளர்கள் இனங்கண் டுள்ளனர் அவையாவன:

1. அபாயகரமான நிலை யினைக் கொண்டுள்ள,
2. அபாயகரமான நடவடிக் கைகள் காணப்படுகின்ற,
3. உடலின் சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடிய பொருட்கள் களஞ்சியப்படுத்தும் வேலைத் தளங்களாகும்.

வேறுவிதமாகச் சொல்வோ மானால் இயந்திரங்களினைப் பாவிக்கும் வேலைத்தளங்களில் ஏற்படும் விபத்து ஏனையவற்றி லும் பார்க்க பாரதூரமானவை. விபத்துக்களைத் தடுப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் எமது அரசாங்கம் தொழில் திணைக்களத்தில் தொழில் சார் பாதுகாப்பு பிரிவு மூலம் தொழிற் சாலைகளில் ஏற்படும் விபத்தி னைத் தடுக்கும் நோக்கில் அங்கு பணி புரியும்தொழிலாளர்களின் பாதுகாப்பு, சேமநலம், சுகாதா ரம் என்பவற்றினை உறுதி செய் யும் பொருட்டு தொழிற்சாலை கள் கட்டளைச் சட்டம் (அத்தி யாயம் 128) அமுல்படுத்துவதுடன், தொழிலதிபர்களிற்கு உரிய ஆலோசனைகளை இலவசமாக வழங்கிவருகின்றது.

ஆனால் கணனிகளைக் கையா ளுபவரிற்கு ஏற்படக்கூடிய விபத் தானது மேற்குறிப்பிட்டவற்று டன் ஒப்பிடும்பொழுது பாரதூர மானவையல்ல. கணனிகள் பிளாஸ்ரிக் மேலுறையினால் உருவாக்கப்பட்டது. கணனி கள் மின்சக்தியில் இயங்குவதால் மின்பாதுகாப்புப் ப்ற்றி அறிந் திருத்தல் வேண்டும். கணனிக ளால் கண்பார்வையில் பாதிப்பு ஏற்படலாம். கணனியின் திரை யின் மத்தியில் ஒளிர்வு கூடியும் கரையில் ஒளிர்வு குறைந்தும் காணப்படும். இதன் விளைவி னைத் தவிர்ப்பதற்கு நல்ல வெளிச்சம் உள்ள சூழலில் கணனிகளைப் பாவிக்க வேண் டும். திரையில் இருந்து உற் பத்தியாகும் ஊதா கலந்த கதிர் கள் இதனால் முன்னைய காலங் களில் கண்பார்வையில் பாதிப்பு ஏற்பட்டது. தற்பொழுது விஞ் ஞான ஆராய்ச்சியின் மூலம் திரையில் ஊதா கடந்த கதிர் கள் உற்பத்தியானது தடுக்கப் பட்டுள்ளது. மின்சக்தியினைப் பாதுகாப்பாக உபயோகித்தல் மற்றும் அதிர்ச்சிக்குள்ளானவர் களிற்கு அளிக்கும் முதலுதவி என்பனவற்றிற்கான அறிவுறுத் தல்களும் தரப்படும்.

**2 வேலையற்ற நேரத்தில் பாதுகாப்பு**

வேலைசெய்யுமிடத்து விபத்து ஏற்படில் நஷ்டஈடும், விடுமுறையில் நிற்கும் நாட்க ளிற்கு ஊதியமும் நிர்வாகத்தி னால் வழங்கப்படுகிறது. ஆனால் வேலையற்ற இடத்தில் விபத்து ஏற்படின் நஷ்டஈடோ அல்லது ஊதியமோ கிடைக்காதவிடத்து ஏற்படும் பாதிப்பு அதிகம். இதனை உணர்ந்து வேலை யற்ற இடத்தில் நிகழும் விபத் தினைத் தவிர்ப்பதற்குரிய வழி முறைகளைப் பின்பற்ற வேண் டும். இந்த வகையான விபத்தி னாலும் தொழிலதிபர்களிற்கு பாதிப்பினை ஏற்படுத்துவதனால்

> **தொழில்புரிவோர் அனைவரினதும் பாதுகாப்பு, சுகாதார சேம நலன்களைச் சிறப்பாகப் பேணு முகமாக 133, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாவட்ட தொழிற்சாலை, பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகத்தில் 1.2.2005 ஆம் திகதி தொழில்சார் பாதுகாப்பு சுகாதார சேமநல தகவல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

அவர்களும் இதற்குரிய நட வடிக்கை எடுக்கவேண்டும்.

வேலையற்ற நேரத்தில் பாதுகாப்பினை இரண்டு பிரிவு களில் அனேகமானவை அடங்கு கின்றது.

1. வீட்டில் பாதுகாப்பு
2. வீதிப் பாதுகாப்பு

**1. வீட்டில் பாதுகாப்பு**

வீட்டில் அபாயம் கூடிய பகுதி சமயலறையாகும். இங்கு காய் கறிகளை வெட்டுவதற்கு பாது காப்பற்ற கூரிய கத்தி பாவிப்ப தும், பொருட்களை சூடாக்குவ தற்கு மின்அடுப்பு, மின்சூடாக்கி, மண்ணெண்ணெய் அடுப்பு, விறகு போன்றவையினை உபயோ கிக்கின்றோம். மேலும் சூடான பொருட்கள், காரமான பொருட் கள் கையாளப்படுவதும், எரிபொ ருள், மின்சக்தியினால் இயங்கும் உபகரணங்கள் பாவித்தலும் நீரினை சமையலுக்கு கையாள் வதும் விபத்து ஏற்படுவதற் குரிய காரணிகளாகும்.

காய்கறிகள் போன்றவற் றினை வெட்டுவதற்கு கூரிய கத்தினைப் பாவிக்கும் பொழுது காயம் ஏற்பட சாத்தியமுண்டு. அனுபவம் குறைந்தவர்கள் இவற்றினை வெட்டும் பொழுது தகுந்த பலகை பாவித்தல் வேண் டும். மண்ணெண்ணெய் அடுப் புக்கும் மண்ணெண்ணெய் நிரம் பிய பின்னரே அதனை தீமூட்டிப் பாவித்தல் வேண்டும். தீ மூட்டிய பின்னர் மண்ணெண்ணெயினை நிரப்பும் பொழுது நிரம்பி வழிய சாத்தியமுண்டு அவ்வாறான வேளையில் அடுப்பு பூராகவும் தீப்பிடிப்பதனால் மரணவிபத் துக்களும் பாரிய எரிகாயங்களும் யாழ்.குடாநாட்டில் நிகழ்ந்துள் ளன. இதேபோன்று நீரிறைக் கும் இயந்திரங்கள் மற்றும் ஏனைய இயந்திரங்கள் இயங் காத நிலையில் எரிபொருள் நிரப்பவேண்டும். மின்சக்தியில் இயங்கும் இயந்திரங்களினை இயக்கும் இடத்தில் இறப்பர் விரிப்புக்களை வைத்திருத்தல் வேண்டும்.

மேலும் சூடான பொருட்களைக் கையாளும் பொழுது வெப்பம் அரிதிற் கடத்திகளான கடதாசி, துணி போற்றவற்றினை போதிய அளவில் பாவித்தல் வேண்டும். வெப்பத்தினால் ஏற்படும் எரி காயங்களிற்கு சுண்ணாம்பு கலந்த தேங்காய்எண்ணெய் அல் லது மரக்கறி எண்ணெயினை உடனடியாகப் பூசுவதினால் அவற் றினால் ஏற்படக் கூடிய பாரதூர மான விளைவுகளை பெருமளவில் குறைக்க முடியும்.

வெங்காயம், மிளகாய் போன்ற காரத்தன்மையுடைய பொருட் களை கையாண்ட பின்னர் கைகளை நன்றாக நீரில் கழுவ வேண்டும். நீரினை ஆகக்கூடிய அளவுநேரம் பாவிக்கும் இடத்து கையிலுள்ள கொழுப்பு பாது காப்புப்படை நீரினால் அகற்றப் படுவதால் நுண்அங்கிகளினால் தோலிற்கும், நகத்திற்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே பாத்திரங்களை மினுக்கிக் கழுவு தலை ஒரேநாளில் செய்யாமல் திட்டமிட்டு எல்லா நாட்களிலும் செய்வதாலும், நீர் உட்புகவி டாத தைலத்தினைப் பாவிப்பதன் மூலம் தோலரிப்பினைத் தவிர்த் துக் கொள்ளலாம்.

அடுத்த அபாயம் கூடிய இடம் குளியலறையாகும். இங்கு வழுக்கி விழக்கூடிய சந்தர்ப்ப முண்டு. குளியலறையில் பாசி வளர்வதாலும் ஈரப்பற்றினாலும் வழுக்கி விழநேரிடம். இதனைத் தவிர்பபதற்கு அடிக்கடி வெளிற் றும் தூளினால் (குளோறின்) குளி யலறையினையோ கிணத்துத் தொட்டியினையோ கழுவவேண் டும். வெளிற்றும் தூள் தோலினை அரிக்கும் தன்மையுள்ளதால் அவற்றினைக் கையாளும் பொழுது தகுந்த தகையுறை பாவித்தல் வேண்டும். சறுக்கும் தன்மை யற்ற பாதணிகளை அணிவது சிறந்த செயலாகும். குளியல றைக்கு சறுக்கும் தன்மையற்ற நிலம் போடப்படுவதும், ஒரு சிறந்த செயலாகும். கால் துடைப் பான்கள் அல்லது விரிப்புக்கள் சேதமுறுவதால் அதில் சிக்குண்டு ஏற்படும் விபத்தினைத் தவிர்ப்ப தற்கு சேதமுற்றவற்றை உப யோகிப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

குப்பிவிளக்கினை அல்லது அரிக்கன் லாம்பினை ஒரு சிலர் படுத்திருந்து வாசிப்பதற்கு பயன்படுத்துகின்றார்கள். இவ் வாறு வாசிக்கும் சந்தர்ப்பங்க ளில் அவர்கள் தங்களையறி யாமல் நித்திரைக்குள்ளாகின் றார்கள். இதனால் மரணவிபத்து மற்றும் எரிகாயங்கள் போன்ற விபரீத விளைவுகள் ஏற்படுகின் றன. மேலும் மங்கலான ஒளி யில் படுத்துப் படிப்பதனால் கண் பார்வை விரைவில் பாதிப்படை யவும் வாய்ப்புண்டு, எனவே இந்த வழக்கத்தினை கைவிடு வது சாலச் சிறந்ததாகும்.

மண்டபத்தில் இலத்திரனி யல் உபகரணங்கள் பாவிக்கப் படுகின்றன. இவை பிளாஸ்ரிக் போன்ற மேலுறைகளினால் மூடப்பட்டுள்ளதால் பாதுகாப் பானது. ஆனால் மின்வழங்கும் பாதுகாப்பான கடத்திகள் நட மாடும் பகுதியில் இல்லாமல் உறுதி செய்தல் வேண்டும். தொலைக்காட்சியினைப் பார்க் கும் பொழுது வெளிச்சமுள்ள சூழலில் தூர இருந்து பார்க்க வேண்டும். அவ்வாறு பார்க்கத் தவறியவர்கள் விலைமதிப்பற்ற கண்பார்வையினை இழந்த சம் பவமும் உண்டு.

எரிபொருளாகிய பெற்றோல், மண்ணெண்ணெய் மற்றும் கிருமி நாசினிகளினை வீடுகளில் சிறு பிள்ளைகள் எடுக்க முடியாத விடத்தும் தீப்பற்றக்கூடிய அபாய மில்லாமல் இருக்கும் இடங்களில் களஞ்சியப்படுத்தல் வேண்டும். கிருமிநாசினிகளைத் தெளிக் கும் பொழுது காற்றிற்கு எதி ராக நின்று தெளித்தல் ஆகாது. கிருமிநாசினி தெளித்ததும் அணிந்திருக்கும் உடையினை மாற்றி நன்கு குளித்தபின்னரே தேநீர், உணவு, தாம்பூலமாகிய வைகளை அருந்தவேண்டும். ஒவ்வொரு கிருமிநாசினிக்கும் அதன் விஷத்தை நீக்கும் மருந் தினை வீட்டில் வைத்திருத்தல் நல்லது. இரு கிருமிநாசினிக ளைக் கலந்து விசிறக் கூடாது.

மின்சாரம் வீடுகளிலும், தொழிற் சாலைகளிலும் தேவைகளி னைப் பூர்த்தி செய்யப் பாவிக்கப் படுகின்றது. மின்சாரத்தினை அவதானமாகப் பாவிக்காதுவி டில் உயிராபத்து ஏற்படக்கூடும். எனவே மின்சாரம் பாவிக்க முன் னர் அதற்கு உரிய பாதுகாப்பு மின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய மின் இணைப்புத் தொகுதிக்கு பாதுகாப்பு வழங் கப்பட்டிருக்கின்றதா என்பதை பாவனையாளர் உறுதி செய்தல் வேண்டும்.

மின்சாரத்தினால் உயிரா பத்து ஏற்படும் காரணிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

1. மின் உபகரணம் பழுதாக இருத்தல்.
2. கசிவு மின்சாரம் மேலுறை யில் பாயும் சந்தர்ப்பம் இருத்தல்.
3. மின்தொகுதியில் உள்ள பாதுகாப்பு உபகரணங்கள் மின் சாரத்தைத் துண்டிக்கத் தவறு தல்.
4. மனித உடலில் மின்சாரம் பாய்தல்.
5. மின்சாரத்தினால் தாக்கப் பட்டவரினை அகற்ற ஆள் இல் லாதிருத்தல்.
6. உரிய முதலுதவிச் சிகி ச்சை அளிக்கத் தவறுதல்.

இவ்வாறான காரணிகள் மூலம் மின்சாரத்தினால் பாதிக் கப்பட்டவருக்கு உயிராபத்தும் ஏற்படலாம்.

**1. மின் உபகரணம் பழுதாக இருத்தல்**

மின் உபகரணம் பழுதாக இருப்பதை மின் அளக்கும் கருவி யின் மூலம் கண்டுபிடிக்கலாம். அவ்வாறு பழுது இருப்பின் அனுபவ முள்ள மின் திருத்துநரைக் கொண்டு திருத்த வேண்டும்.

**2. கசிவு மின்சாரம் மேலு றையில் பாயும் சந்தர்ப்பம் இருத்தல்**

மின் உபகரணங்களின் மேலுறைகள் உலோகத்தினால் செய்யப்பட்டிருந்தால் கசிவு மின்சாரம் மேலுறையில் பாயும் சந்தர்ப்பம் உண்டு. விஞ்ஞானம் முன்னேற ஒரு சில மின் உபக ரணங்களிற்கு மின்னைக் கடத் தாத பிளாஸ்ரிக் மேலுறைகள் பாவிக்கப்படுகின்றன.

**3. பாதுகாப்பு உபகரணங் கள் மின் சுற்றினைத் துண்டிக் கத் தவறுதல்**

எல்லா மின் இணைப்புத் தொகுதிகளிற்கும் பாதுகாப்பு உபகரணங்கள் பொருத்தப்பட் டுள்ளன. மேலதிக சுமைக்கும், புவிக்கசிவு ஏற்படும் சந்தர்ப் பங்களிற்கும் மின்சக்தியினைத் துண்டிக்க உருக்கிகளும், புவிக் கசிவு மின் ஆளி ஆகியவையும் உள்ளன. மின் சுற்றின் சுமைக்கு ஏற்றவாறு ஒவ்வொரு மின் சுற் றிற்கும் ஒழுங்குவிதிகளிற்கு அமைய உருக்கிகள் இணைக் கப்படல் வேண்டும். அவ்வாறு அமையாவிடில் மின் சுற்றிற்கு அபாயம் விளைவிக்கும். மின்சா ரம் பாயும் பொழுதும் மின் சக்தி துண்டிக்கப்படாது. இதனால் தீ விபத்தும்- ஏற்படும் சந்தர்ப் பம் உண்டு. புவிக்கசிவு ஆளி இயங்குகின்றதா என அடிக்கடி அதில் உள்ள மஞ்சள் பொத் தானை அழுத்திப் பார்க்க வேண் டும். அவ்வாறு அழுத்தும் பொழுது மின்சக்தி துண்டிக்கப்படாது விடில் அனுபவமுள்ள மின் திருத்துநரைக் கொண்டு சீர் செய்தல் வேண்டும்.

**4. மனித உடலில் மின்சாரம் பாய்தல்**

மின்சாரத்தினைப் பாவிக் கும் பொழுது இறப்பர் போன்ற மின் கடத்தாத காலணிகளைப் பாவிக்கத் தவறும் போது, மனித உடலில் மின்சாரம் பாயும் சந் தர்ப்பம் உண்டு. மேலும் மனித உடல் ஈரலிப்பாக இருந்தால் கூடிய அளவு மின்சாரம் பாய சந்தர்ப் பம் உண்டு.

**5. மின்சாரத்தினால் தாக் கப்பட்டவரினை அகற்ற ஆள் இல்லாமல் இருத்தல்**

மின்சாரத்தினால் தாக்கப் பட்டவரினை மின்சுற்றில் இருந்து பாதுகாப்பாக காய்ந்த தடி போன்ற மின்கடத்தாத பொருட்களால் அவரை அப்புறப்படுத்த வேண் டும். அவ்வாறு இல்லாதுவிடின்

**தொகுப்பு:-ஞா.ஐங்கரன்**

காப்பாற்றுபவரும் அபாயத்திற்கு உள்ளாக வேண்டி நேரிடும்.

**6. உரிய முதலுதவி அளித் தல்**

மின்சாரத்தினால் தாக்கப் பட்டவரை பாதுகாப்பாக அப் புறப்படுத்திய பின்னர் அவர் நினைவிழந்திருந்தால் உரிய முதலுதவியினை வழங்க வேண் டும். நினைவிழந்தவரின் சுவா சம் தடைப்படலாம். இருதயம் இயங்காது இருக்கலாம். ஆகவே அவரின் இருதயம் இயங்கு வதற்கு இருதயம் இருக்கும் இடத்தில் அதிர்ச்சி கொடுக்கும் விதத்தில் அடிக்கலாம். அனுப வம் உள்ளவர்களே இதைச்செய்ய வேண்டும்.

அத்துடன், செயற்கைச் சுவா சம் வழங்குதல் வேண்டும். முதலுதவி வழங்குபவர் பொறு மையை இழத்தலாகாது. மின் சாரத்தினால் தாக்குண்டவருக்கு மூன்று மணித்தியாலத்திற்குப் பின்னரும் நினைவு வந்த சந் தர்ப்பம் உண்டு. நினைவு இழந்தவரிற்கு முதலுதவி செய்து நினைவு வந்தபின்னர் உடனடி யாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுதல் வேண்டும்.

**வீதி விபத்து**

1. போக்குவரத்து விதிகளை அனுசரியாமை,
2. சீரற்ற வீதி,
3. குறைபாடுள்ள வாகனங் கள் மூலமே அனேகமாக வீதி

**தகவல்:- சி.மகேந்திரராஜன்**
**பட்டயப் பொறியியலாளர்**
**தொழில் திணைக்களம்**

விபத்துக்கள் ஏற்படுகின்றன.

போக்குவரத்து விதிகளை முறையாக அனுசரித்தால் வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஒருவர் விபத்துக்குள்ளானால் அவரின் உழைப்புக்குப் பாதி ப்பு ஏற்படுவதுடன், மேலதிக மாக வைத்தியச் செலவு, குடும்ப உறுப்பினர்களுக்குக் கஷ்டம், காயத்தினால் ஏற்படும் வேதனை என்பவற்றை அனுபவிக்க வேண்டி நேரிடும். 'வருமுன் காப்பதே சாலச் சிறந்தது' என்ற முதுமொழியின் முக்கியத்து வத்தை உணர்ந்து விபத்துக்க ளைத் தவிர்ப்போமாக. □

# தேசிய அடையாள அட்டையை ஏற்றுக்கொள்ள நிபந்தனையா?

(யாழ்ப்பாணம்)

நாடுபூராவும் ஏற்றுக்கொள்ளப்படும் தேசிய அடையாள அட்டைகளை, யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் நிறுவனமொன்று ஏற்றுக்கொள்வதில் நிபந்தனைகள் விதிப்பதால் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

கைத்தொலைபேசி நிறுவனமான டயலொக், யாழ்.அலுவகம் புதிதாகவாங்கிய கைத்தொலை பேசிகளுக்கு சிம் கார்ட்' போடுவதற்காகச் செல்லும்போது யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள டயலொக் நிறுவனம் யாழ்ப்பாண முகவரியிலுள்ள தேசிய அடையாள அட்டைகள் இருந்தால்தான் ஏற்றுக்கொள்ள முடியும் என நிபந்தனை விதிபபதாகவும்,

இதனால் தென்னிலங்கையில் நீண்டகாலம் வசித்து அவ்விட விலாசத்துடன் தேசிய அடையாளஅட்டை வைத்திருபபவர்கள் பெருத்த சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் அரசில ஏற்றுக்கொள்ளப்படும் அடை யாள அட்டைகளை ஏற்றுக் கொள்ள தனிநிறுவனங்கள் நிபந்தனை விடுப்பது ஏன்என்றும் கேள்வி எழுப்புகிறார்கள். (து)

# கற்றறிந்தார் ஏத்தும் சுன்னாகம் குமாரசாமிப் புலவர்

யாப்பருங் கலக்காரிகை, தண்டியலங்காரம். சாணக்கிய



நீதி வெண்பா, ரகுவம்ச சரிதம், சிசுபாலவதம், குசேலோபாக்கியானம், ராமோதந்தம் முதலிய நூல்களை வசனநடையில் எழுதி வெளியிட்டவரும் கம்பராமாயணம பாலகாண்டம், அகப்பொருள் வெண்பா ஆகியவற்றுககுப் புதிய உரைகண்டவருமான சுன்னாகம் குமாரசாமிப் புலவரை தமிழ் கூறும் ஒல்லுலகம் என்றுமே மறக்க மாட்டாது.

சுன்னாகம் மயிலணியில் உதித்த முத்துக்குமாரு கவிராயர், முருகேசு பண்டிதர், சங்கர பண்டிதர் முதலிய தமிழறிஞர் வரிசையில் இவரும் ஒருவராக விளங்கினார்.

தமிழ் வளர்த்த தாமோதரனார் எனப் போற்றப்படும் சி. வை.தாமோதரம்பிள்ளையும் இவரும் சமகாலத்தவர்கள். இவரது தமிழ்புலமை அறிவாற்றலை உணர்ந்த தாமோதரம்பிள்ளை இவரை ஏழாலை சைவவித்தியாசாலைக்கு ஆசிரியராக நியமித்தார். பின்னர் ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் கைலாச பிளளையின் வேண்டுகோளுக்கிணங்க அப்பாடசாலையின் தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

1855ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதி பிறந்த குமாரசாமிப்புலவர், 1922 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி இறக்கும்வரை தமிழை தனது உயிராகப் பேணித தமிழ் தளைக்கத் தொண்டாற்றி வந்திருக்கிறார். அவரது 150ஆவது ஆண்டு நினைவு நாள் இன்று நினைவுகூரப்படுகிறது.

இவரது புலமையால் தமிழ் வளம் பெறறது. சுன்னாகம் மயிலணி வித்துவப் பரம்பரை பெருமை பெற்றது.

**சிவஸ்ரீ இ.குஞ்சிதபாதக் குருக்கள்**

கற்றறிந்தார் ஏத்தும் சுன்னாகம் குமாரசாமிப் புலவர் போன்ற தமிழ் அறிஞர்களது நூல்களைத் தேடிக்கண்டுபிடித்து அச்சேற்றி தமிழ் உலகுக்கு அளிக்க வேண்டியது தமிழ்ப பெருமக்களின் கடமையாகும்.

# மின்சார சபையை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 28 ஆம் திகதி இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட விருந்தபோதும் காலவரையின்றி ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் செயலாளர் பி.விராந்தி தெரிவித்துள்ளார்.

இந்த மறுசீரமைப்பு திட்டத்தின் ஊடாக இலங்கை மின்சாரசபை 8 நிறுவனங்களாக செயறபட உத்தேசிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இந் நடவடிக்கை இலங்கை மின்சாரசபை தனியார் மயப்படுத்தும் திட்டம் என மின்சாரசபையின் தொழில்சங்கங்கள் தெரிவித்ததோடு இச் செயல்திட்டத்திற்கு பலத்த எதிர்ப்பையும் வெளிப்படுத்தியிருந்தார். (க-8)

# உடத்தலவின்ன கொலை வழக்கு அனுருத்தரத்வத்த சாட்சியமளிப்பு

கொழும்பு)

உடததலவின்னப் பகுதியில் 10பேர்கொலைசெய்யப்பட்டது தொடர்பான வழக்கின் முதலாம் எதியான முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைசசர் அனுரத்தரத்வத்த கடந்த வியாழககிழமை நீதிமன்றில் சாட்சியளித்துள்ளார்.

மேற்படி வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துச்கொள்ளப்பட்ட போது அனுரத்தரத்வத்த சாட்சியம் அளித்துள்ளார்.

இந்தக் கொலைவழக்கில் அவரின் புதல்வர்கள் உட்பட 15 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

2005ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் தினத்தில் உடத்தலவின்னப் பகுதியில் 10பேரை சுட்டுக் கொலை செய்தமை தொடர்பாக முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் உட்பட பலருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. (க-8)

# புனானைப் படுகொலை குறித்த கொபி அனானின் இரங்கல் செய்திக்கு நாட்டுப்பற்றுள்ள தேசிய இயக்கம் எதிர்ப்பு

(கொழும்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம கொபி அனான் விடுத்துள்ள இரங்கல் செய்திக்கு நாட்டுப்பற்றுள்ள தேசிய இயக்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது இலங்கையின் ஒரு மைப்பாட்டை உதாசீனப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாக அந்த இயக்கத்தின் தலைவர் எல்.ஏ.குணவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கடிதமொன்றை அந்த இயக்கம் ஐககிய நாடுகள் சபைக்கு நேற்று முன்தினம் அனுப்பியுள்ளது.

இதற்கு முன்னர் இலங்கையில் அரசியல் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்ட வேளைகளில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் இவ்வாறான அறிக்கையொன்றை வெளியிடவில்லை.

இருந்தும் விடுதலைப்புலிகள் மீதான கொலைக்கு மட்டும் இரங்கல் செய்திவெளியிட்டமையானது எமக்கு வருத்தமளிக்கின்றது எனவும் அவ்வியக்கம அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ர-4)

# சேத விபரங்களைத் திரட்டும் பணியில் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்டுள்ள சேதவிபரங்களைத் திரட்டும் நடவடிக்கைளில் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம ஈடுபட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

வீடமைப்பு, உட்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம், உல்லாசப் பயணத்துறை சிறிய மற்றும் நடுததர தொழில்முயற்சி போன்றவற்றின் முழுவிபரங்களும் சேகரிக்கப்படுமென திணைக்களத்தின் இயக்குநர் டி.பி.வி.எஸ். வைத்தியரட்ண தெரிவித்தார்.

சேத விபரங்களைத் திட்டும் பணியின் முதற்கட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கொழும்பு, களுத்துறை, ஹம்பகா மற்றும் புத்தளம் ஆகியமாவட்டங்களில் முற்றிலும் சேதமான மற்றும் பகுதியளவில் சேதமான வீடுகளின்கணிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ர-4)

## 'கடவுளே எனக்கு இரங்கும் உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன்'

## தவக்காலச் சிந்தனை

**அடர்த்தியான மரங்களும், படர்ந்து பரவிய புதர்களும், கொத்துக் கொத்தாக பூத்த மலர்ச்செடிகளும் நிறைந்திருந்த ஓர் அழகய தோட்டத்திற்குள், ஒரு தாய் தனது மூன்று வயதுப் பாலகனுடன் விளையாடி மகிழ வருகிறாள். மகனின் கண்ணில் படாதவாறு, ஒரு மரத்திற்குப் பின்னால் ஒளிந்து கொள்கிறாள். அம்மா, அம்மா, அன்று கூவி அழைத்துக் கொண்டே , அவன் தாயைத் தேடி தோட்டம் முழுதும் சுற்றி வருகிறான். தோட்டக்காரர். அழாதே தம்பி, இதோ பார், சுவையான மாம்பழங்கள்; வேண்டுமானால் உனக்கென்று பறித்துத் தருகிறேன், இதோபார், அழகிய றோஜா மலர்; அதில் ஒன்றை நீயே பறித்துக் கொள்: அழுகையை விடு என்கிறார். ஆனால, அந்தப் பாலகனுக்கு மாம்பழங்களையும் றோஜா மலர்களையும் வட, அவனது அம்மாதான் வேண்டும் என அடம்பிடிக்கிறான. அச்சிறு பாலகனைப் போல, நாமும் வாழும் இப் பூவுலகத தோட்டத்தில் அனுபவிக்க அனைத்து சுகங்களும் இருந்தாலும், இவற்றைப் படைத்து நமக்கு அருளிய தாய் போன்ற கடவுளோடு நாம வாழ்வோம். தங்களின் மகிழ்சிககு கடவுள் தேவையில்லை யென்ற முடிவுக்கு வந்து, அவருக்குப் போட்டியாக, நன்மை தீமை அறியும் அறிவுடைய கடவுளை போல ஆகவேண்டும் (தொ.நூ.3:5) என்று விரும்பியதை ஆதாம் ஏவாளுக்கு வந்த முதல சோதனை.**

**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**

**புத்தூர்ச்சந்தி, கைதடி ஆகிய இடங்களில் நேற்று இடம்பெற்ற களேபரக் காட்சிகள். (படங்கள் ஐங்கரன்)**



வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின் - குறள்

வலம்புரி

# அரசுக்கு அழுத்தம் கொடுக்க சிங்கள மக்கள் துணிய வேண்டும்

"யுத்தம் என்பது மனங்களில் ஏற்படுகின்றது" இது யுனிசெவ் நிறுவனத்தின் முடிபு. இந்த முடிபில் இருக்கக்கூடிய உண்மைத் தன்மைக்கு இலங்கை நல்லதோர் உதாரணமாகும்.

இலங்கையில் 20 வருடங்களாக நடைபெற்று வரும் யுத்தத்திற்கு முடிபுகட்டும் எண்ணம் இலங்கை அரசுகளிடம் அறவே இல்லை. இந் நிலைக்கு அடிப்படைக் காரணம், தமிழ் மக்களின் உரிமைகளை ஏற்பதில் சிங்கள அரசுகளுக்கு இருக்கக்கூடிய விருப்பமின்மையே ஆகும்.

யுத்தம் நடத்தி தமிழ் மக்களை அழிப்பதா? அல்லது தமிழ் மக்களின் உரிமை பிரச்சினைகளைத் தீர்த்து இலங்கைத் திருநாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதா? என்ற இருவேறுபட்ட வினாக்களை சிங்கள கட்சிகளிடம் முன் வைத்தால், அவற்றின் விடை யுத்தம் நடத்தி தமிழ் மக்களை அழிப்பது என்பதாகவே இருக்கும்.

20 வருடகால யுத்தம் என்பது ஓர் சாதாரணமான காலப்பகுதியன்று. இத்தகையதோர் நீண்டகால யுத்தம் உலக நாடுகளுக்கிடையில்கூட நடந்ததில்லை. ஆனால், உள்நாட்டில் ஒரு நாட்டின் பிரஜைகளுக்கிடையில் நீண்டகாலம் யுத்தம் நீடித்தமைக்கு என்னதான் காரணம் என்றால் அதற்கான விடை நேர்மையான அரசு இலங்கையில் இருக்காது போனமையே ஆகும். அதாவது காலத்திற்குக் காலம் ஆட்சி பீடங்களை கைப்பற்றிக் கொண்ட அரசுகள் சிங்கள மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக தமிழ் மக்களுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டன.

தமிழ் இன விரோத பிரசாரங்கள் மூலமே தத்தம் கட்சிகளை ஆட்சி பீடத்தில் அமர்த்தலாம் என்ற குறுகிய சிந்தனையால் ஏற்பட்டதே இன யுத்தம் ஆகும்.

சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்திற்காக பெரும்பான்மையான சிங்களவர்கள் தமிழ் மக்களை எப்பாடும் படுத்தலாம் அதற்கு அரசுகளின் அசீர்வாதம் உண்டு. பௌத்த சிங்களவர்களுக்கு இந்த உலகில் இருக்கக்கூடிய ஒரே ஒரு நாடு இலங்கையே. இதனை விட்டால் பௌத்த சிங்களவர்கள் எங்கே போவார்கள் என்ற கேள்வி சிங்கள மக்களிடையே எழுப்பிய பேரினவாத அரசியல்வாதிகள் தமிழ்மக்களுக்கு எதிராக வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டனர்.

தம்மால் ஏற்பாடு செய்யப்பட்ட வன்முறைகள் பூரண வெற்றிபெறவேண்டும் என்பதற்காக அதனைத் தாமே முன்நின்று நடத்திய அரசியல் தலைவர்களையும் வரலாறு பதித்து வைத்துள்ளது. அன்று ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தமிழ் மக்களுக்கு எதிராக பிரசாரம் செய்த பிரதான சிங்களக் கட்சிகள் இன்று தமிழ்மக்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்வதன் மூலமே ஆட்சியை பிடிக்கலாம் என்ற கட்டத்திற்கு வந்துவிட்டமை, செய்த வினையின் தோச நிவாரணம் ஆக அமைந்துள்ளது.

எனினும் சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்களுடைய ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஆட்சியாளர்கள் நடந்துகொள்வதை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்று பொய்ப் பிரசாரம் செய்துவிட்டு யுத்தத்தை விரும்புகின்ற அரசுகளுக்கு சிங்கள மக்கள் தக்கபாடம் புகட்ட வேண்டும்.


அதற்காக தேர்தல் வரும்வரை காத்திருக்காது அகிம்சை வழிப் போராட்டங்களை நடத்தி ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அதனைச் செய்வதில் ஏற்படும் ஒவ்வொரு தடங்கல்களும் பேரழிவையே தருவதாகவே இருக்கும்.

# அரச சார்பற்ற நிறுவனங்கள் நேர்மையான கணக்கறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்

## மக்கள் சேவை அமைப்புக்கு இதுவே அழகு என்கிறார் கே.கணேஷ்

(யாழ்ப்பாணம்)

**அரசசார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களது நலன்களைப் பேணுவதிலும் அவர்களது வாழ்க்கையை முன்னேற்றுவதிலும் அக்கறையாக இருக்க வேண்டும். இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.**



யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 14 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்றுமுன் தினம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச உதவிகள் கிடைக்காத போது அல்லது கிடைக்கும் உதவிகள் போதாது இருக்கும் சந்தர்ப்பங்களில் மக்களுக்கு உதவி செய்வதற்காகவே அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறு மக்களுக்கு உதவி வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்காகப் பெறுகின்ற நிதியினை உரியமுறையில் உரியகாலப் பகுதிகளில் திட்டமிட்டபடி பயன்படுத்த வேண்டும்.

அத்துடன், இவ் அரசசார்பற்ற நிறுவனங்களுக்குக் கிடைக்கப் பெறும் நிதியினை எவ்வாறான முறைகளில் மக்களுக்காகப் பயன்படுத்துகிறீர்கள் என்பதை நேர்மையான கணக்கறிக்கைகள் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.

அத்துடன் நிறுவனங்கள் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் செயற்பட வேண்டும்.

யாழ்.மாவட்டத்திலே மக்களது நலன் கருதி செயறபடுகின்ற உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இணைந்து கொள்ளவேண்டும். இதன்மூலம் சரியான முறையில் அறிக்கைகளை உரிய காலங்களில் இணையத்திடம் சமர்ப்பித்து புரிந்துணர்வுடனும், ஒற்றுமையுடனும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் எனவும் அவர் மேலும் வேண்டுகோள் விடுத்தார். (ப-19)

# இயல்பு வாழ்க்கையை பாதுகாக்கவே அவசர காலச் சட்டம் நீடிப்பாம்

## ரட்ணசிறி விக்கிரமநாயக்க விளக்கம்

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மக்களின் இயல்பு வாழ்க்கையினை பாதுகாக்கும் நோக்கிலேயே அவசரகாலச் சட்டம் அமுல்படுத்த வேண்டிஏற்பட்டது.

இசசட்டம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதற்கு மாத்திரமே பயன்படுத்தப்படும் என மக்கள் பாதுகாப்பு நீதி மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தொிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் கூடியவேளையில் அவசரகாலச்சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தத்துடன் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டமை, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் நாட்டில பரவலாக இடம்பெற்றன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கும் மக்கள் சேவையை ஒழுங்கான முறையில் அமுல்படுத்தும் நோக்கிலேயே இந்த அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ற-4)

# புனானைப் படுகொலைச் சம்பவம் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுமா?

## தற்போது எதுவும் கூறமுடியாதென க.கா.குழு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு.அம்பாறை அரசியல துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட 6 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலா? என்பது குறித்து தற்போது எதுவும் தெரிவிக்க முடியாது என இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் அலஸ்ரத்தியோ தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இந்தப் படுகொலைகள் குறித்து எமது கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.இது வழமையாக நடைபெறும் விடயம். இந்தக் கொலையின் பின்னணியில் யார் தொடர்புபட்டிருக்கிறார்கள் என்பது குறித்து முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை.

இதுகுறித்து ஆராய்ந்து பார்ப்பது பொலிஸாரின் கடமையாகும.இருப்பினும் இந்த நிலைமை குறித்து நாம் அவதானித்து வருகின்றோம். அதிஷ்டவசமாக எல்லா நடவடிக்கைகளும் சுமுகமான முறையில் இடம்பெற்று வருகின்றன.

இந்த மோசமான சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பது குறித்து உண்மையில் எமக்குத் தெரியாது. இந்தச் சம்பவத்தின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்பது தெரியாமல் சம்பவம் குறித்து இறுதி முடிவிற்கு வர முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# கைத்தொழில் பயிற்சி

(புத்தளம்)

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த யுவதிகளுக்கு கைத்தொழில் பயிற்சிகளை வழங்கி வருமானம் ஈட்டும் திட்டமொன்றை சிறு கைத்தொழில், கிராமிய அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

புனர்வாழ்வு, வன்னிமாவட்ட அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீன், அமைச்சர் லால்காந்தவிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து இந்தப் பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறிய கைத்தொழில் மூலம் பிரதேசத்தின் வளங்களைப பயன்படுத்தி வருமானம் ஈட்டும் திட்டங்களுக்கு வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்திலுள்ள முகாம்களில் வசிக்கும் இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெறுவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமென கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிராந்திய முகாமையாளர் பி.ஆர்.ஜயதிலக தெரிவித்தார்.

இப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு கடந்த வியாழக்கிழமை புத்தளம் தம்பபன்னியில் அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் எம்.ஏ.அப்துல் பாரி தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு மேலும் பிராந்திய முகாமையாளர் பேசுகையில்,

அரசாங்கத்தின் கைத்தொழில் கிராமங்களை அமைக்கும் திட்டத்திற்கமைய இத்திட்டம் பரீட்சார்த்தமாக ஆரம்பம் செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு கைத்தொழில் துறையில் பயிற்சி வழங்கப்பட்டு, அதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (க-15)

# ஒன்றுகூடுக!

(யாழ்ப்பாணம்)

குருநகர் புதுமை மாதா ஆலயத்தை இடித்துக் கட்டும்படி யாழ்.ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அறிவித்தல் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக கலந்துரையாடுவதற்காக ஆலய பங்கு மக்களை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு கோயில் பிறபகுதியில் ஒன்றுகூடுமாறு ஆலயப் பங்குச் செயலர் ஞானப்பிரகாசம் அழைப்பு விடுத்துள்ளார். (ற-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நீங்கள் காண்கின்ற இந்த எல்லாப் பொருட்களும் வெறும் கனவுகள். அது இப்போது உங்களுக்குத் தெரிகிறது. பழைய லட்சியவாதிகள் மட்டும் அல்ல. தற்கால இயற்பியல் அறிஞர்களும் காண்பது ஒளியைத் தான், அதிர்வுகளின் வேறு பாட்டால் தான் வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று சொல்கிறார்கள். நீங்கள் கடவுளைக் கண்டாக வேண்டும். ஆன்மாவை உணர்ந்தாக வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

## நேருவுக்கு...

அம்பாறை மண்ணோடும் அந்த மண்ணின் மக்களோடும் ஒன்றியதாகவே அவரது வாழ் விருந்தது. சிங்களப் படைகளின் தமிழின அழிப்புப்போர் உச்சம் பெற்றிருந்த நாட்களிலும் போர் ஓய்வு நிலவுகின்ற இன்றைய நாட்களிலும் அந்த மண்ணோடும் அந்த மக்களோடு இணைந்து நின்று, அனைத்துக்கும் முகம் கொடுத்தார். சிங்களப் படைகள் அம்பாறை மண்ணில் புரிந்த அழிவுகளையும் அட்டூழியங்களையும் நெஞ்சுறுதியுடனும் நேர்மைத் திறனுடனும் உலகிற்கு வெளிக் கொணர்ந்தார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-04)

## மிதிவெடியில்...

இச்சம்பவத்தில் கனகரட்ணம் கமலதாஸ் (வயது 24) என்ற இளைஞரே காலிலும் கழுத்திலும் படுகாயமடைந்துள்ளார். (த-04)

## கிழக்கு....

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனிற்கும் இடையிலான சந்திப்பு மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் நேற்று நடைபெற்றது. இச்சந்திப்பின் பின்பு செய்தியாளர்கள் மத்தியில் கருத்துக் கூறியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறான படுகொலைச் சம்பவங்கள் போர்நிறுத்த உடன்படிக்கையின் சூழ்நிலையைப் பாதிக்கும். மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமான அரசியல் கொலைகள் இடம்பெற்றுள்ளன என்றார். விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நிவாரணப் பணிகள் தொடர்பாக ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தி உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதுபற்றி கவனம்செலுத்தப்பட்டு வருகின்றது என்றும் அகாசி கூறினார்.(த)

## பரத நிருத்திய அரங்கேற்றம்

கொக்குவில் கலாபவன மாணவி செல்வி இந்திரா பிரியதர்சினி சீவரத்தினத்தின் பரதநிருத்திய அரங்கேற்றம் இன்று காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் இரா.சிவச்சந்திரனின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ந)

## 2 பெண்களின்...

கரையொதுங்கிய சடலங்கள் இரண்டும் அடக்கம் செய்யப்பட்டன. கரையொதுங்கிய சடலங்களிலிருந்து மீட்கப்பட்ட தடையங்கள் முல்லைத்தீவு பொலிஸ் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன. (4)

## குடாநாட்டில் பரவலாக...

ஹர்ததாலின்போது வீதிகள் சந்திகள் தோறும் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதுடன் மின் கம்பங்கள் போடப்பட்டு போக்குவரத்துகளும் தடைசெய்யப்பட்டன.

கண்டி வீதியில் கைதடி, மீசாலை, புத்தூர்ச் சந்தி ஆகிய இடங்களில் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்குமிடையில் வெடித்த களேபரத்தில் இராணுவக் காவலரண்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதுடன் காவலரண மணமூடைகளும் தூக்கி வீசப்பட்டன.

இதனையடுத்து பொதுமக்களைக் கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்புகைக் குண்டுப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் பொதுமக்கள், பொலிஸார் மீதும் இராணுவத்தினர் மீதும் கற்களை வீசினர். பதிலுக்கு இராணுவத்தினரும் பொதுமக்கள் மீது கற்களை வீசித்தாக்கினர். இதேவேளை கொடிகாமம், நெல்லியடிப் பகுதிகளிலும் வீதி மறிப்பில் ஈடுபட்ட பொதுமக்களுக்கும், படையினருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது கொடிகாமத்தில் 5 இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றைய ஹர்த்தாலினால் இராணுவம் மற்றும் பொலிஸாரின் போக்குவரத்துகள் முடக்கப்பட்டதுடன் இராணுவத்தினருக்கான உணவு விநியோகமும் நேற்று மாலைவரை தடைப்பட்டதாகத் தெரிகிறது. இதேவேளை பிரதான வீதிகள் சந்திகள் என்பவற்றினூடான போக்குவரத்துகள் தடைப்பட்டதால் குறுக்கு வீதிகளிலும் குச்சொழுங்கைகளினாலும் பொதுமக்கள் பயணம் செய்ததை அவதானிக்கமுடிந்தது.

அவசர தேவைகள் கருதி வீதிக்கு வந்தபொதுமக்கள் தொடர்ந்து செல்லமுடியாது திண்டாடியதையும் காணக்கூடியதாக விருந்தது.


நேற்றைய ஹர்த்தாலினால் குடாநாடு முற்று முழுதாகவாகனப் போக்குவரத்துகளின்றியும் வியாபார நிலையங்கள் மூடப்பட்டும் முடங்கியது.

(த-19,101,126,33)

## மன்னார்...

சேர்ந்த ஞானப்பிரகாசம் சீலன் கலிஸ்ரஸ்ஜோர்ச்(வயது 23) என்ற பொதுமகனே உயிரிழந்தவராவார். மன்னார் சின்னக்கடையைச் சேர்ந்த நாகசாமி விஜயன் (வயது - 40) சமாதானச் செயலகப் பணிமனையில் பணியாற்றும் செபஸ்ரியாம்பிள்ளை வெலிஸ்ரோல் (வயது 23) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

சம்பவத்தையடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். சம்பவஇடத்தில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். ( த-04)















இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.